பக்கங்கள்: பத்து

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 28 | திங்கட்கிழமை | (12-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 24

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## நோர்வேத் தூதுக் குழு லண்டனில் சந்திப்பு

# ஆலோசகர் பாலசிங்கத்தின் வருகை பிற்போடப்பட்டது!

## தென்னிலங்கை அரசியல் நிலைமை உசிதமில்லையாம்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவா சிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இலங்கை விஜயம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களின் அறிவுறுத்தலுக்கமையவே அன்ரன் பாலசிங்கத்தின் விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.**

நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் ஆகியோர் லண்டனில் புலி களின் ஆலோசகர் அன்ரன் பால சிங்கத்தை அண்மையில் சந்தித்து நீண்ட நேரமாகக் கலந்துரையாடி யுள்ளனர்.

தென்னிலங்கையில் ஜனாதிபதி க்கும் பிரதமர் ரணிலுக்குமிடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியி னால் சமாதானப் பேச்சுவார்த்தை கள் தடைப்பட்டுள்ளதுடன் பேச்சு வார்த்தைகளைத் தொடர்வதற்கான (10ஆம் பக்கம் பார்க்க)

## அயர்லாந்து சமாதானக் குழு தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கொழும்பு)

சமூக அபிவிருத்திக்கான ஆய் வுச் செயலகத்தின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்துள்ள அயர்லாந்து சமாதானக் குழுப் பிரதிநிதிகள் நேற்று புத்த ளம் மாவட்டத்திற்குச் சென்று வட பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் நிலைவரம் பற்றி அறிந்து கொண்டனர்.

புத்தளம் நகரசபை மண்டபத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் வடபகுதியில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் மீள்குடி யேற்றம், எதிர்கால செயற்பாடுகள் என்பன குறித்து ஆராயப்பட்டது.

இதேவேளை அயர்லாந்து சமா தானக்குழுவினர் இன்று வன்னிக்கு சென்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளனர். (ந)

## வரலாற்றுக் கலைப் படைப்புகளே அந்நியரை எதிர்த்து போராட வைத்தது

### கலைஞர்கள் கௌரவிப்பில் தலைவர் பிரபா

(கிளிநொச்சி)

கலைப்படைப்புக்கள் அபார சக்தி வாய்ந்தவை, உணர்வுகளை எல்லோர மனங்களிலும் ஆழமாகப் பதிய வைப் பவை, நான் சிறுவனாக இருந்த போது வீரபாண்டிய கட்டப்பொம்மன், சங்கிலியன் போன்றோரின் வரலா ற்றை நாடகங்களாகவும் திரைப்பட மாகவும் பார்த்தேன். இவையே எனது மனதில் அந்நியர்களை எதிர்க்க வேண்டுமென்றும், ஆக்கிரமிப்பாளர் களுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற எண்ணப்பாட் டையும் தோற்றுவித்தன. இதன் பரிணாம வளர்ச்சியே இன்று ஒரு (10ஆம் பக்கம் பார்க்க)




## சமாதான முயற்சியை ஜனாதிபதி சவாலாக ஏற்றுக்கொள்ள வேண்டும்

### பௌசி எம்.பி வேண்டுகோள்

(கொழும்பு)

புரிந்துணர்வு உடன்படிக்கை யில் இருந்து விலகுவது தொடர் பான பிரதமரின் அறிவிப்பை சவாலாக ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் சமாதானத்தை முன்னெடுக்கவும் தயாராக வேண் டும். இவ்வாறு பொ.ஐ.மு பாராளு மன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் பௌசி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதி 3 முக்கிய அமைச்சுக் களைப் பொறுப்பேற்றார். இது ஜனாதிபதி புலிகளுடன் பேச்சுக் களை நடாத்தத்தகுதியுள்ளவர் என்பதையே காட்டுகிறது. தற்போ தைய நெருக்கடி நிலைக்குத தேர்தல் தீர்வாக அமையமாட்டாது.

இருதலைவர்களும் ஒருவரை யொருவர் குற்றச்சாட்டிக் கொண்டி ருக்கிறார்கள் அரசியல் விளை யாட்டுக்கு இது சரியான தருணம் அல்ல. பாதுகாப்பமைச்சை வைத் திருக்கும் சகல தகுதிகளும் ஜனா திபதிக்கு உண்டு. இதனால் சமாதானத்தை முன்னெடுப்பது அவரின் கடமை. தேர்தலுக்காக 600 மில்லியன் ரூபாய்க்கள் செலவிடுவது இச்சூழ்நிலையில் வீணானசெலவு. இவ்வாறு பௌசி தெரிவித்தார். (த.6)

## மாகாண சபைகளில் தேசிய ஆட்சி முறை

## யாழ்.தபாலகம் திறப்பது மீண்டும் பிற்போடப்பட்டது

## மாகாண சபைகளில் தேசிய ஆட்சி முறை பிரேரணை முன்வைக்கிறார் பிரதமர் ரணில்

(கொழும்பு)

மாகாண மட்டங்களில் தேசிய ஆட்சி முறையைப் பரீட்சார்த்தமாக அமுல்படுத்த பிரேரணை ஒன்றைப் பிரதமர் முன்வைத்திருக்கிறார். இப்பிரேரணையின்படி எதிர்க் கட்சியில் இருந்து ஒவ்வொரு மாகாண சபைக்கும் இரண்டு அமைச்சர்களை நியமிப்பதற்கு பிரதமர் விரும்புகிறார். இதன்படி மாகாணசபை தேர்தல்களில் தனித்தனிக்கட்சிகளாக ஐக்கிய தேசியக் கட்சியும், பொது ஜன ஐக்கிய முன்னணியும் போட்டியிட்டு அதில எக்கட்சி தோற்றாலும் அதன் இரு தேர்வாளர்கள் மாகாண சபைக்கு அமைச்சர்களாக நியமிக்கப் படுபவார்கள்.

இம் முயற்சியனது தேசிய அளவில் இரு பெரும் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையேற்படுவதற்கு ஒரு பரீட்சார்த்தமானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதமர் தனது பிரேரணை பற்றி எதிர்க் கட்சித்தலைவருக்கு ஏற்கனவே அறிவித்துவிட்டார். இவ்விடயம் பற்றி ஜனாதிபதியுடனும் கலந்துரையாடும் நோக்கத்தைப் பிரதமர் கொண்டிருக்கிறார்.

ஏப்பிரல் மாதம் முற்பகுதியில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.தபாலகம் திறப்பது மீண்டும் பிற்போடப்பட்டது

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் திறக்கும நிகழ்வு மீண்டும் பிற்போடப் பட்டுள்ளது.

யாழ்.பிரதம தபாலகம் மற்றும் சாவகச்சேரி, காரைநகர் ஆகிய தபாலகங்கள் எதிர்வரும் 14ந் திகதி திறப்பதற்கு முடிவாகியிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இவற்றுக்கான திறப்பு விழா பிற்போடப்பட்டுள்ளதாக தபால் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இத் திறப்பு விழா அநேகமாக எதிர்வரும் 19ந்திகதி நடாத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தபாலகங்களின் திறப்பு விழா இரண்டாவது தடவையாகவும் பிற்போடபட்டுள்ளமை இங்கு குறிபஙீபி டத்தக்கது.

(ச)

## இராணுவ வாகனம் ஏறியதில் குடும்பஸ்தர் நசியுண்டு மரணம்

### பருத்தித்துறை–சரசாலை வீதியில் பரிதாபம்

(பருத்தித்துறை)

மோட்டார் சைக்கிளில் இருந்து தவறிவிழுந்த குடும்பஸ்தர் மீது இராணுவ வாகனம் ஏறியதில் அவர் நசியுண்டு அவ்விடத்திலேயே மரணமானார். அவருடன் சென்ற மற்றொரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்துயரச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு பருத்தித்துறை சரசாலை வீதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் நெல்லியடியைச் சேர்ந்த சின்னத்துரை மனோகரன் (வயது34) என்பவரே மரணமானவர். அதே இடத்தைச் சேர்ந்த கே.விஜயகுமார் (வயது22) என்பவர் படுகாயமடைந்தார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்று கொண்டிருந்த மூவரில் இருவர் வீதிவளைவு ஒன்றில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் சமாதான முயற்சிக்கு ஜனாதிபதி ஒத்துழைப்பு தரவில்லை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் சமாதான வேலைத் திட்டங்கள் குறித்துப் பலருக்கு நம்பகத் தன்மை ஏற்படாவிடினும், மக்களின் வாழ்வினை இது இயல்பு நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருப்தி வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், அரசு-புலிகளுக்கிடையான யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து வடக்குக் கிழக்கினை மனிதாபிமானப் புனர்வாழ்வு உதவிகள் மூலம் மேம்படுத்த முடிந்தது. இதனால் நாட்டின் வருமானம் முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தை விட 5.6 வீதத்தால் அதிகரித்தது.

இந் நிலையில் புலிகளால் முன் வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபு அடிப்படையில் கடந்த நவம்பர் மாதம் நாட்டில் நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வை உருவாக்கும் விதத்தில் அரசு-புலிகள் தரப்பிற்கிடையில் பேச்சுவார்த்தை ஒன்றை மீண்டும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், இவை அனைத்தும்

(10ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எதிர்க்கட்சியின் சதி முயற்சிகளை உலக நாடுகள் அவதானிக்கின்றன

## ஆலோசகர் அலிசாகீர் மௌலானா கருத்து

(கொழும்பு)

**பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் பெரும் வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தை பின்னர் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் புத்துயிர் ஊட்டி வளர்த்துக் கொண்டிருப் பதை, பொறுத்துக் கொள்ள முடியாத ஜனாதிபதி கடந்த நவம்பர் மாதம் 12ஆம் திகதி அரசினால் சமர்ப்பிக கப்படவிருந்த வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்கவிடாது 3 அமைச்சுக்களைப் பறித்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தினார்.**

இவ்வாறு கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் ஆலோசகர் அலிசாகீர் மௌலான, இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், 2001ஆம் ஆண்டுக்கு முன்னர், அதாவது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் நாடு பெரும் அழிவுப்பாதையில் சென்று கொண்டிருந்தது.

யுத்தம் என்ற போர்வையில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும் அவர்களின் உடைமைகள் அழிக்கப்பட்டும் வந்தன. யுத்தத்திற்கே அப்போதைய அரசாங்கம் பெருமளவு நிதியை இறைத்தது. இதனால் பொருளாதாரத் துறையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

அப்போது இடம்பெற்ற யுத்தத்தின் விளைவாகவே இன்றும் எமது மக்கள் அகதிகளாகவும், அநாதைகளாகவும், ஏழைகளாகவும், ஊனமுற்றவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய ஒரு இக்கட்டான நிலையிலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் 2001ஆம் ஆண்டு ஆட்சிப் பீடமேறியது. அப்போதைய நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு அரசாங்கத்தை வழிநடத்தப் போகிறார்? திறைசேரியில் நிதியில்லை, போரினால் பல பிரதேசங்கள் அழிந்துள்ளன என்ற ஆதங்கம் பலர் மத்தியில் காணப்பட்டது.

அதற்கு பதில் வழங்கும் வகை

இதற்கிடையில் இவற்றையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த ஜனாதிபதியும், எதிர்க் கட்சியினரும், சில சதித்திட்டங்களைத் தீட்டி வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்கவிடாது தடுப்பதற்கு முயன்றனர்.

"நாட்டில் சமாதானம் ஏற்பட்டு பொருளாதாரத் துறையிலும் ஓர் நல்ல முன்னேற்றம் கண்டால், தாங்கள் தொடர்ந்தும் எதிர்க்கட்சியிலேயே இருக்கவேண்டும்" என்ற எண்ணமும் அச்சமும் அவர்களிடையே காணப்பட்டதே இதற்கான பிரதான காரணம்.

இதனால் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முன்னர் ஒரு குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என ஜனாதிபதிக்கு அவர்கள் தொடர்ச்சியாக அழுத்தங்களை கொடுத்தனர்.

அதற்கமையவே, ஜனாதிபதி நவம்பர் மாதம் 4ஆம் திகதி பாதுகாப்பு, உள்துறை, தொடர்பாடல் ஆகிய 3 அமைச்சுக்களையும் திடீரென பறித்தார்.

இதன் விளைவாக பிரதமரால் முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதான முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், நாட்டில் பெரும் அரசியல் குழப்பங்களும் ஏற்பட்டன.

இவற்றையெல்லாம் சர்வதேச நாடுகள் மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சியினரது பொறுப்பற்ற நடவடிக்கைகளையும் தீவிரப் போக்கினையும் அவதானித்து வருகின்றன.

அத்துடன் ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாடுகளை சர்வதேச

யில்லை. எங்காவது ஒரு பிரதேசத்தில் ஒரு சிறிய பிரச்சினை ஏற்பட்டால் கூட, கண்காணிப்புக் குழு, மனித உரிமைகள் ஆணைக் குழு, பொலிஸ், இராணுவம், விடுதலைப்புலிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எனப் பலரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்காலத்திலும் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறாதிருக்கவும் வழிவகை செய்யப்படுகின்றன.

எனவே ஜனாதிபதி பாதுகாப்பு அதிகாரங்களைக் கையில் எடுத்துக்கொண்டு, இவ்வாறான வேடிக்கையான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும்.

பாதுகாப்பு அதிகாரங்களை தன் வசமாக்கி இறுகப்பிடித்துக் கொண்டு பிரதமரே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் எனக் கூறிவருவது நியாயமற்றது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் முக்கிய அம்சம் "மோதல் தவிர்ப்பு" அந்த மோதல் தவிர்ப்பை அமுல் படுத்துவதற்கான அதிகாரம் பாதுகாப்பு அமைச்சரிடமே இருக்கின்றது.

அதற்கமைய அப்போது பாதுகாப்பு அமைச்சு பிரதமரின் பொறுப்லேயே இருந்தது ஆனால் தற்போது அது ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றது.

இத்தகைய நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை பிரதமர் ஆரம்பிக்கும் பட்சத்தில் வன்முறைச் சம்பவங்கள் தோன்றினால் அதனை பிரதமரால் கட்டுப்படுத்த முடியாது. அதற்கான அதிகாரங்களும் அவரிடம் தற்போது இல்லை.

எனவே பிரதமர் மீது குற்றச் சாட்டுக்களையடுக்கி, சமாதான முயற்சிகளை குழப்பி வருவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கைவிடவேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன்,

அனைத்து இனமக்களும் ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும் வாழும் வகையில் அவர்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து இனப்பிரச்சினையை விரைவில் தீர்த்து வைக்க ஜனாதிபதி பிரதமருடன் இணைந்து செயற்படவேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் விட்டுக் கொடுப்புகளுடனும், புரிந்துணர்வுடனும் ஜனாதிபதி செயற்படுவாரானால், நாட்டில் மீண்டும் போர் ஏற்படாது நிரந்தர சமாதானம் ஒன்று மலரும் சூழ்நிலை உருவாகும்.

இவைதவிர நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெடுக்கடிகளைத் தனிப்பதற்கு சர்வதேச நாடுகள் முன்வரவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல நாட்டின் இரு தலைவர்களுக்கும் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.

அதேசமயம் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற கசப்புணர்வான சம்பவங்களையெல்லாம் அவர்கள் மறந்து நாம் "தமிழ் பேசும் மக்கள்" என்ற ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு தமது உரிமைகளுக்காக குரல் கொடுக்கவேண்டும்.

சிறுபான்மையினத்தவர்களாகிய நாங்கள் எமக்குள்ளேயே ஓர் ஒற்றுமையை வளர்ந்து எமது பலத்தை பெருக்கிக் கொண்டால், எம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்றார்.

(தி 60.10)

# மக்களின் ஆணைக்கு எதிராக பிரதமர் ரணில் செயற்படுகிறார்

## பத்தேகம சமிந்த தேரர் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

கொண்டு பேசுகையிலேயே அவர்

எனவே, பிரதமர் ரணில் விக்

துள்ளன என்ற ஆதங்கம் பலர் மத்தியில் காணப்பட்டது.

அதற்கு பதில் வழங்கும் வகையில் பிரதமர் "மோதல் தவிர்ப்பு" உடன்படிக்கை ஒன்றை விடுதலைப் புலிகளுடன் செய்து, நாட்டில் அமைதியை நிலைநாட்டினார். இதற்கமைய அமைதியான சூழ்நிலையை சாதகமாக்கி விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்தார்.

இந் நிலைமைகளை அவதானித்த சர்வதேச நாடுகள் ஆச்சரியம் அடைந்தன. பிரதமரின் இச் செயற்பாடுகளைப் பாராட்டின. அவரின் சமாதான நடவடிக்கைகளை ஊக்குவத்து, ஒத்தழைப்பையும், ஆதரவையும் வழங்கின. நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கும் என சர்வதேச நாடுகள் பெருமளவு நிதியை வழங்க முன்வந்தன.

இதனால் பிரதமர் சமாதானத்தை நிலைநாட்டுவதுடன் மட்டுமன்றி, நாட்டை அபிவிருத்தி செய்து பொருளாதாரத் துறையை வளர்ச்சியடையச் செய்வதற்கும் அதிகளவு அக்கறை காட்டினார்.

அந்த அடிப்படையிலேயே கடந்த நவம்பர் மாதம் 12ஆம் திகதி ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவிருந்தது.

வருகின்றன.

அத்துடன் ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாடுகளை சர்வதேச நாடுகள் கண்டித்து வருவதுடன், சமாதான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனவும் அவருக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

ஆனால், ஜனாதிபதியோ தனது செயற்பாடுகளை குறிப்பாக 3 அமைச்சுக்களையும் தான் பொறுப்பேற்றமை சரியானதே என நியாயம் கற்பிக்க முனைந்து வருகிறார்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பிரதமர் தவறிவிட்டார். அதனாலேயே தான் பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதாக அவர் கூறி வருகிறார்.

2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினாரா? என்ற கேள்வியை இங்கு கேட்போமானால் இல்லை என்றே பதில் கிடைக்கும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கடந்த 7 வருடங்களாக ஆட்சியில் இருந்தது. அப்போது வன்முறைகள் குண்டுத் தாக்குதல்கள், கடத்தல்கள் என்பன இடம்பெறவில்லையா? தாராளமாகவே நடந்தன. அப்போது நடைபெற்ற சம்பவங்களில் தமிழ் பேசும் மக்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் எல்லாம் முடிமறைக்கப்பட்டன.

ஆனால், இப்போது அப்படி

## பத்தேகம சமிந்த தேரர் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சியில் இருந்தும் புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விலகிக்கொள்வதாக கூறுவது அவரின் பொறுப்பற்ற தன்மையைக் காட்டுவதாக காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பத்தேகம சமிந்த தேரர் கவலை தெரிவித்துள்ளார்.

"நாகொடையில்" இடம்பெற்ற ஒன்று கூடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசுகையில்,

மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளமையினைக் காரணங்காட்டி சமாதான முயற்சியில் இருந்து பிரதமர் விலக நினைப்பது தவறான செயலாகும். அத்துடன் இத்தகைய செயல் மக்கள் அவருக்கு அளித்த ஆணைக்கு எதிரானது.

எனவே, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதற்காக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

இதே சமயம், அதிகாரப் பரவலாக்கலுக்கான திட்டத்தை முதலில் ஜனாதிபதியே முன்வைத்துள்ளதால், அதற்கு பூரண ஆதரவளிக்க வேண்டிய பொறுப்பு பிரதமரிற்கும் அவரது அரசாங்கத்திற்கும் இருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டினார். (தி-60,10)

## அமைச்சர்களின் புதல்வர்களை வலை விரித்துவரும் பொலிஸார்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்து விசாரணை செய்து வரும் பொலிஸார் இரண்டு முக்கிய அமைச்சர்களின் புதல்வர்களைத் தேடி வருகின்றனர்.

விவசாயம் மற்றும் கால்நடை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா மற்றும் கடற்றொழில், நீரியல் வள அமைச்சர் மஹிந்த விஜயசேகரா ஆகியோரின் புதல்வர்களையே பொலிஸார் தேடி வருகின்றனர்.

களியாட்ட நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட இவர்கள் அங்குள்ள சிலருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்றும், அது பின்னர் இரு குழு மோதலாக முடிந்தது.

இம் மோதலில் மேற்குறிப்பிட்ட அமைச்சர்களின் புதல்வர்கள் 3 நபர்களைத் தாக்கி காயப்படுத்தியுள்ளதாகவும், காயமடைந்த மூவரும் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர்காசிமின் உறவினர்கள் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இச் சம்பவம் குறித்து தாமதமின்றி விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ்மா அதிபர் இந்தியா டி.சில்வாவைப் பணித்துள்ளார். (தி-60,10)

## பிரிவுகளை மேற்கொள்க

(கொழும்பு)

தென் கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பதிவுகள் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

இம்முறை தென் கிழக்கு பல் கலைக்கழகத்திற்கும் 234 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பதிவுகளை மேற்கொண்ட மாணவர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை துரித ஆங்கில மீட்டல் வகுப்புக்கள் நடைபெறும் என அப் பல்கலை பதிவாளர் அறி வித்துள்ளார். (தி-04)

# 2004 புத்தாண்டுப் பலன்

# உங்களுக்கு எப்படி?

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான மே மாதப் பலன்களின் தொடர்ச்சி.**

## விருச்சிகம்



**விசாகம் 4 வது பாதம் அனுஷம் 4 பாதங்கள்-கேட்டை 4 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

இது குரு வக்ரம் கழிந்த காலம். உச்சம் பெற்ற சூரியன் அட்டமத்து சனியோடு கூடிய கிரகங்கள் சுக்கிரன், செவ்வாய் நீங்கள் பொறுப்புக்கள் நிறைந்தவர். விருப்பப்படி விரயம் செய்து வந்தீர்கள். இது காலக்கோளாறுதான் காரணம். உங்கள் கூட்டாளிகள் தெளிவு, தைரியம் மிக்கவர்கள். அவர்களின் போக்கு செயல் உங்களுக்கு ஆதாயத்தையும், மனோதைரியத்தையும் உண்டாக்கும். பூர்வீகச்சொத்துக்கள் வகையில் இருந்துவந்த இடையூறுகளை அகற்றி விடுவீர்கள். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவழிகள் பிரகாசமாக இருக்கின்றன. அரசியல் அல்லது அரசாங்க உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு உங்கள் செய்தொழில் வகைக்கு அனுகூலத்தை உண்டாக்கும். கடன், வழக்கு தள்ளிப்போகும். கவலையின்றி செயல்படுங்கள். குழந்தைகள் வகை மருத்துவச்செலவும் இருக்கிறது. சுபச் செலவுகளும் இருக்கின்றன. சுப விஷயங்கள் நிகழ்ச்சி விருந்துண்பது போன்ற நன்மைகள் இருக்கின்றன. தூரத்துக கடிதச் செய்திமட்டும் சலனத்தை உண்டாக்கும். இது குறித்து எற்படும் மனச சலனத்தை அறவே போக்கி விட வேண்டும். காரணம் தற்போது நடைமுறையில் உள்ள நன்மைகள் பாதிக்கக்கூடும். நாகரிக வாகனச் செலவு, வழக்குச் செலவும்கூட இருக்கத்தான் செய்யும். நண்பர்கள் போக்கு நன்மையாகவே இருக்கிறது. குடும்பவிஷயங்களும் நன்மையாகவே இருக்கும். போட்டி, பந்தயம் வேண்டாம். புகழ்ச்சிக்காக செலவிடுவதை தவிர்க்கவும். ஏதாவது திடீர்செலவு ஏற்படும். குடும்பத்தில் பொதுவாக திருப்தியற்ற போக்கு காணப்படும். கணவன், மனைவிக்குள் அடிக்கடி கருத்து வேற்றுமை காணப்படும். அதிக அலைச்சல் சரியான தூக்கமின்மை காரணமாக உடல் ஆயாசம் இருக்கும். தகுந்த ஓய்வு தேவை போட்டி, பந்தயங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். செய்தொழில் எது வாயினும் திருப்திகரமாக வந்துசேரும். அரசாங்கவகை மனிதர்கள் சந்திப்பு அவசர அவசியப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவியாக இருக்கும். இதற்கு முன்பு இல்லாத அளவு செவ்வாய் உங்களுக்கு தைரியத்தை அழிக்கக் கூடியன வாகும். வழக்கு முயற்சிகள் இவற்றிற்கு நல்ல வாய்ப்புகள் கிட்டும். காணாமல் போனவையும் கிட்டும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு உயர்வு அல்லது இடமாற்றம் இருக்கும். வழக்குத் தள்ளிக்கொண்டே போகும். இத்தனைகரும் காரணம் ஓர் அளவு ஏழரைச் சனியின் பாதிப்புத்தான் காரணம் என்பது உண்மை. அவை முழுமையாக விபததுப் போன்றவைகளையும் கொடுக்க வாய்ப்பு உள்ளது. ஆகவே, மேலே கண்ட பலன்கள் ஒரு வழியாக நடந்து வந்தாலும் சுபக்கோளின் தன்மையினால் இவற்றுக்குத் தீர்வு உண்டு. மன திடத்தோடு செயல்படும்போது இடை இடையே நன்மைகளையும் அனுபவிக்கத்தான் செய்கிறீர்கள். சனியும் சாரமும் ஒன்றுசேர்ந்தது. குடும்பத்தில் சிக்கல் என்பது தவிர்க்க முடியாதது. இது புது மணத் தம்பதிகள் கவனித்து செயல்படவேண்டும்.

## தனுசு



**மூலம் 4 பாதங்கள்-பூராடம் 4பாதங்கள் உத்தராடம் முதல் பாதம் வரை 9 பாதங்கள்**

புத்திரியர்களின் குடும்ப உயர்வு, கல்வி முன்னேற்றமும் திருப்தியாக இருககிறது. சில புதிய தொழில் ஆரம்பம் வியாபார ஸதல மாற்றமும் அவ்சியமாகும். சகோதரன் அல்லது சகோதரி வகையில் இருந்துவந்த மனபேதங்களை அகற்றிவிடலாம். பெரியவர்கள் அன்பும், ஆதரவும் வளரத்தான் செய்யும். கடந்த காலத்தைவிட, இப்போது ஒருபடி ஏற்றம்தானே தவிர, குறைவு இருக்காது. சில வழியில் கூட்டு முயற்சியும் அவசியமாகும. குறுகிய கால தன ஆதாயமும் உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டுப்போன்ற வழிகளில் வெற்றி உங்கள் பக்கம்தான் இருக்கினறன. வழக்கு வேகம் குறைந்தது. சத்துருக்கள்பற்றி கவலைப்படவேண்டியதில்லை. அயல்நாடு தூரதேசப் பிரயாணம் கடிதத்தொடர்பு அவசியமாகும். முன்பு பகைப்பட்டிருந்தவர்கள் இப்போது இணக்கமான போக்கில் இயக்கம் கொள்வர். எழுத்து, ஒப்பந்தம் போன்ற நன்மைகள் சிலவும் உண்டாகும். நீங்கள் தனித்து இயங்குவதைவிட கூட்டு முயற்சியில் இயங்குவது பலன் தருவதாக இருக்கும. குடும்ப சொத்து விவகாரங்கள் இருபபவர்கள் சற்று அலைச்சலுடையவர்களாக இருப்பார்களே தவிர, காரிய சாதனை நிற்காது. ஆனால் வழக்குமட்டும் முடிவு பெறாது. வார்த்தைஅளவில் நின்ற காரியங்களை செயல்முறைக்குக்கொண்டுவந்து விடுவீர்கள். இது பிற்பகுதியில்தான் சாத்தியமாகும். உறவினர் வருகை குடும்பத்தில் சுபச்செலவுகளை உண்டாக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு விருப்பம் இல்லாத கடிதம் வருவது, இலாகா மாற்றல் உத்தரவை பெறுவது போன்றவை இருக்கும். குழந்தைகள் ஆரோக்கிய வகையில் சிறு சிறு பாதிப்பும், மருந்து செலவுகளும் இருக்கும். பெண்களுக்கு இப் போது வந்திருப்பது புது இடம்தான் சிலவகையில் மனதிருப்தி இல்லாமல் இருக்கின்றன என்றாலும் உடன் இருப்பவரை இதமாக சரிகட்டிப் போக வேண்டும். அலைச்சல் அதிகம். வழக்குவகை நீங்கள் முயன்றும் நல்ல போக்கை விரும்பியும், அவர்கள் ஒன்றுபட்டு வரவில்லை. இதரவழக்கு இருந்தாலும் அப்படியே இழுத்துக்கொண்டு போகும். ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியாது. உறவினர்கள் விலகித்தான் இருப்பர். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு தன் தொழில் வழிப் பிரச்சினைகள் அனைத்தும் நன்றாகவே இருக்கின்றன. விரோதியாக இருந்த சக ஊழியரே இப்போது உங்கள் அருகில் நெருங்கி இருக்கின்றனர். பிறர் கூறும் அவதூறு வார்த்தைகள் குறித்து கவலைப்பட வேண்டாம். பண வரவு ஓரளவு திருப்தியாகவும் தொழில் முறை ஒரே சீராகவும் இருக்கின்றன. குடும்பத்தில் இடை இடையே மருந்துச் செலவுகள் உண்டாகிக் கொண்டே இருக்கும். புது உடைகள் தைப்பது, ஆபரண மாற்றம் செய்வதால் பெண்களுக்கு அவசர செலவும் இருக்கிறது. பற்றாக்குறை விடவில்லை. குறையாக விட்ட வேலைகளை பூர்த்தி செய்யவும் இடம்தராது. வேலையாட்கள் வகையில் நீங்கள் முழு ஒத்துழைப்பை எதிர் பார்க்க முடியாது. உடன் இருநதவர்களே உஙகளுக்கு எதிராக நடப்பதும் குறிப்பிடத்தக்கது. இதையெல்லாம் உத்தேசித்து மிகவும் பக்குவமாகநடந்து பகைவரைக் குறைத்துக்கொள ளவும்.

## மகரம்



**உத்தராடம் 2,3,4வது பாதங்கள்-திருவோணம் 4 பாதங்கள்-அவிட்டம் 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

இப்போது தமிழ்ப் புத்தாண்டு பிறந்திருக்கிறது. சூரியன் உச்சம். ராகும் உடன் இருக்கிறது. 6ல் மறைந்தவர்கள் சனி, செவ்வாய், சுக்கிரன் அட்டமத்தில் குருவும் சுக்கிரனும் உடல் உஷ்ண அசௌகரியம் இடை இடையே இருக்கும். பின்பு தொழில் வழிமாற்றம் அவசியமாக இருக்கும். சிலர் இடம்மாறுதல் செய்து தொழில் அமைத்தல். கூட்டுத்தொழில் உண்டாவதும் இருக்கும். சில முயற்சியில் ஆதாயமும் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் மிதமான போக்குதான் இருக்கும். பழைய நண்பர்களைச் சந்தித்து புதிய திட்டங்களைப் பற்றிய விளக்கங்கள் அறிய அவசியமாக இருக்கும். உத்தியோகஸ்தாகளும் பதவி மாற்றம் கடந்து போன கார்ரியங்களும் சிலவற்றில் எழுத்துமூலமான நன்மைகளும் உண்டாக்கவல்லது. கடன் வழக்குப் பிரச்சினைகள் மட்டும் தொடர்ந்து இருக்கும். என்றாலும், ஒளி மிக்க நேரம் ஆரம்பித்து விட்டதை உறுதிப்படுத்துகின்றன. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு இப்போது ஒளிமிக்க நேரம் உருவாகி வருவதை உணரலாம். பெரும்பதவி காத்திருக்கிறது. கணவன், மனைவி உறவு இனிமையாக இருக்கும். காத்திருந்த விஷயங்கள் அனுகூலம் சிலமாத ஆரம்பத்திலேயே வநதுவிடும். அரசாங்க மனிதர்களின் சந்திப்பு நல்ல பேச்சு சூழ்நிலையை உருவாக்கும். நாகரிக வாகனம் வாங்குவது அல்லது மாற்றி அமைப்பது உண்டாகும். நண்பர், உறவினர் இல்லங்களுக்குச்சென்று வருதல், விருந்துண்பதும் இருக்கும். உத்தியோகப்பிரிவு உயர் மட்டத்திலும் சரி கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்கும் இதுவே. நீங்கள் எப்போதோ செய்த செயல் இப்போதுதான் மற்றவர் கவனத்தை ஈர்த்து இருக்கிறது. அதன் விளைவுதான் உங்களுக்கு மேலிடத்தில் உள்ளவர் எழுத்து வகையில் சில சிக்கலை உள்ளாக்காமல் இருக்கமாட்டார்கள். அவ்வழிச் செலவுகள் இடம்பெறும். தனம் கொடுக்கல் வாங்கல் பற்றிய கவலை வேண்டாம். இப்போதுதான் நீங்கள் வேகமுடையவர்களாக இருக்கிறீர்கள் எழுத்துத் துறையில் உள்ளவர்களுக்கு இரு முக்கிய பிரயாணங்கள் இருக்கின்றன. இது சிலருக்கு அயல்நாட்டு பிரயாணமாகவும் இருக்கலாம். அவசிய அவசரம் உடையதாக இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகளில் இடை இடையே தனவரவு செய்துகொண்டே இருக்கும். கணவன், மனைவி உறவு கண்ணியம், திருப்தியுடையதாக இருக்கிறது. முன்பு இருந்துவந்த கசப்பான சூழ்நிலை இப்போது இல்லை. குடும்பத்தில் உறவினர் வருகை அதிகமான செலவுகளைக் கொடுக்கத்தக்கது தான் ஆனால் இந்த செலவுகள் உங்களுக்கு வருவாய் திருப்தியாக இருப்பதால சரிக்கட்டிப்போகும். வழக்கு, கடன் விஷயத்தில் நீங்கள் துரித கவனம் உடையவர்களாகவே இருக்கிறீர்கள். இந்த வேகம் அல்லது போக்குதான் பொதுவாக உங்களை நெருக்கடியில் இருந்து விடுவிக்கிறது.


## கும்பம்



**அவிட்டம் 3,4வது பாதங்கள்-சதயம் 4பாதங்கள்-பூரட்டாதி 1,2,3 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

உங்கள் சனி பஞ்சமத்தில் நட்பு, சுக்கிரனும், செவ்வாயும் உடன் சேர்ந்தனர், ஏழுக்குரிய சூரியன் உச்சம், மிசசம் இருக்கும் கிரகங்களைப் பற்றி கேட்கவே தேவையில்லை. கேந்திர குரு நல்லவனே. மற்றும் சிறு சிறு சலனப்போக்கு இல்லாமல் இல்லை. சூரியனும், புதனும் சுற்றி வளைக்கப்பட்ட சுக்கிரன் என்பதை மறக்கமுடியாது. கடன், வழக்கு இவைகள் கட்டுப்பட்டதுதான். சிலருக்கு அரசாங்கக்கடன் வந்து சேருவதும் இருக்கும். கணவன், மனைவி உறவு கண்ணியமாக இருக்கும். குடும்பத்தோடு பிரயாணம் செய்வது, விருந்து உண்பது போன்றவைகளும் இருக்கின்றன. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு இப்போது சூரியன் உடல் உஷ்ணத்தை அதிகரிக்கச் செய்பவன். தொழில்வழி உயர்வையும் கொடுப்பவனே. இல்லறப்பற்று மிகுந்து காணப்படும். எனவே சில தவறுகளையும் செய்யக்கூடியவர்களாக இருப்பீர். இதற்கு சுக்கிரனும் ஒரு காரணமாகும். சிலர் இடமாற்றத்தையும் பெறுவர். குடும்ப சொத்து சம்பந்தமான வழக்கு சிலருக்கு செலவைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். சிலருக்கு இப்போது அயல்நாடு செலலும் வாய்ப்பும் உண்டாகும். கலைப்பரிவு ஆண், பெண்களுக்கு தனநிலை தாரளமாக இருக்கும். சிலவகையில் தனித்து நின்று செயல்பட வேண்டியும் இருக்கும். தனநிலை நன்றாகவே இருக்கிறது. சில வேலைகள் மட்டும் தாமதமாகின்றன. அரசாஙக மனிதாகள் சிலா முன்பு உங்களுக்கு உதவியாக இருந்தவர்கள் தற்பொழுது வேறுபட்டு நிற்பதை உணரலாம். குடும்பத்தில் ஏதேஒரு இடைவெளி உண்டாகி இருக்கும். கடன் விஷயத்தில் கவனம் செலுத்துவது நல்லது. இதனை அகற்ற முயற்சிக்கவும். தனநிலை சுமாராகவே இருக்கும். பிரயாணம் உண்டு. செய்தொழில் வழியை செப்பனிடுவதில் தான் உங்கள் கவனம் இருக்கவேண்டும். மற்றவர்களுக்காக அலைச்சல் பட்டு பயன் அடையலாம் என்னும் நோக்கத்தைவிட்டு விடுங்கள். எனினும் மனம் தளராது செயலில் ஈடுபாடு உடையவர்களாக இருப்பீர். தனநிலை கடந்த மாதத்தை விட சுமாராக இருக்கும். இதை மனதில் வைத்துக்கொணடு தீயதையே எதிர்பார்த்து இருக்கவேண்டாம். சனி உங்கள் நண்பர் என்பதையும் நினைத்துப் பார்க்கவேண்டும். நோய் கடனையும் தீவிரப்படுத்தக்கூடியனவல்ல. குடும்பத்து சுப விஷயங்கள் ஆரம்பத்தில் தடையும் பின்பு நன் முடிவாகவும் இருக்கும். முக்கிய காரியங்களை முடிப்பதில் துரிதப்போக்கு உடையவர்களாக இருப்பீர்கள். விடுமுறைகளைக் கழிக்கச் செல்லும் இடத்தில் வினையைத் தேடிக் கொண்டு வராமல் இருந்தால் போதும். செலவுகள் கடுமையாக உள்ள காலம் இது. உறவினர், நண்பர்கள் இல்லத்தில் சுப விஷயங்களில் கலந்துகொள்வது, விருந்துண்பதும், புதிய நண்பர்களைச் சேர்ப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இப்போது இந்த மத்திமப் பகுதியில் நீங்கள் வேகமுடையவர்களாக செயற்பட்டும் காரியதாமதம் உடையவர்களே. கணவன், மனைவி வகையில் சிறு இடைவெளி காணப்படுகிறது. உறவினர்களால் ஏறபட்ட கலகம் தொடர்ந்து சிக்கலாகவே இருக்கும். சுப விஷயம் குறித்த கடிதங்கள் திருப்தியாக வரும்.

## மீனம்



**பூரட்டாதி 4 வது பாதம்- உத்திரட்டாதி 4 பாதங்கள்-ரேவதி 4 பாதங்கள் வரை- 9 பாதங்கள்**

தமிழ்ப் புத்தாண்டு பிறந்து, கௌரவக்கோள சூரியன் உச்சனாகி விட்டான். கணடச் சனியை பற்றியே கவனம் வைத்திருக்காமல், காரியத்தில் கண்ணாக இருப்பது நல்லது. சுக்கரனும் செவ்வாயும் சுகத்திலேதான் இருக்கின்றனர். ஆனால் 6ல் குரு பொறுப்புகளை ஏற்கவேண்டி இருக்கும். மேல்நிலை மனிதர்கள் திருப்தியான சூழ்நிலையில் இயங்குவர். சகோதரன் சகோதரி வகையில் முன்னேற்றத்தையும் சுபம் அடைதல் போன்றவற்றையும் உண்டாக்குவான் சனி. கவனமறதியினால் களவு போதல் பொருள் இழப்பு போன்றவற்றை உண்டாக்குவான் சனி. அல்லது பிறரால் ஏமாற்றமும் நேரிடலாம். உத்தியோகப்பிரிவினர்கள் இந்த வகையில் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். மற்றவர் மறைமுகச் செய்கை உங்களை பாதிக்க வாய்ப்புண்டு தனவகையில் எப்படி இருந்தாலும் முன்னேற்றமே இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. கலைப்பிரிவினர்கள் இந்த வகையில் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். தனவகையில் எப்படி இருந்தாலும் முன்னேற்றமே இருக்கிறது. கலைப்பிரிவினர்களுக்கும் இது சிக்கலை உண்டாக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உங்கள் பிரச்சினைகள் எல்லாவற்றையும் முதலில் தள்ளிவைத்துவிட்டு செயல்படவும், இந்தக் காலங்களில் உங்கள் முயற்சிகள் எதுவும் பலன்தராது. இந்தக் காலங்களில் மேல் அதிகாரிகளைச் சந்திப்பது பேச்சுவார்த்தைகள் தொடருவதும் நன்மை தராது. வழக்கு இருப்பவர்கள் வாய்தா வாங்கிக் கொள்வதும் நல்லது. குடும்பவகையில் சில சமயம் கசப்பான வார்த்தைகள் உண்டாவதும், தவிர்க்க முடியாது. தொழில் வழியில் அலைச்சலும் அகால உறக்கம், அகால உணவு கொள்வது போன்ற நிலை அடிக்கடி உண்டாகும். இவற்றைப் பொருட்படுத்தாமல் காரியத்தில் கண்ணாக இருக்கவும். குடும்பத்தில் சில விஷயங்கள் சாதகமாக இருக்காது. கொடுத்துவைத்த பொருளை கேட்டாலும் திரும்பப் பெறமுடியாது. எனவே உங்கள் வேகத்தை இப்போது சில காலம் எல்லாவகையிலும் தள்ளிவைப்பது உத்தமம். பண விஷயத்தில் ஒரே சீரான போக்கு இருக்கும். ஆரோக்கிய வகையிலும் அப்படியே தொழிலில் சிலர் பகைப்பட்டு விலகியும் இருப்பா. கொடுக்கல் வாங்கலில் சற்று விழிப்பாக இருக்கவும். தொழில் வகையில் தனமுடக்கம் தவிர்க்க முடியாது. நீங்கள் குறித்த காலத்தில் செயல்படும் விதம் செம்மையாக இல்லாத காரணத்தால், தொழில் மந்தம் என்பது தானே வரக்கூடியவைதான். பழைய கடன்கள் சில வார்த்தையளவில் பாதிப்புக் கொடுப்பதாக இருக்கும். வழக்கு வகையும் அவ்வளவு வேகம் இல்லாமல்தான் இருக்கும். கணவன், மனைவி உறவு கண்ணியமுடையதுதான். அரசாங்க ஊழியர்களால் இப்போது எவ்வித நன்மையும் இருக்காது என்பதும் உறுதி. மேலும், இந்த நேரத்தில் குடும்பத்திலும் கடன்பட்டாவது சுப காரியங்களை நிறைவேற்றுவீர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

சோதிடமேதை ராமன்

# பிரதமர் ரணிலின் கருத்துக்களுடன் அமைச்சர் பீரிஸ் முரண்படுகிறார்

## ஜே.வி.பி. பிரசாரச் செயலர் ஏளனம்

(கொழும்பு)

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலமே நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணமுடியுமென ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.பிரதமர்சமாதான முயற்சியில் இருந்து விலகியிருப்பது பற்றி ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவ் இதனைத் தெரிவித்தார்.அவர் தொடர்ந்து கூறுகையில

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு நாட்டு மக்களும் புத்திஜீவிகளும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

எனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு உத்தரவிட வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க சமாதான நடவடிக்கைகளை முன் னெடுத்துச் செல்வதற்கு பின்வாங்கு கின்றார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து தான் விலகிவிட்டதாக பிரதமர் தெரிவிக்கும்அதேசமயம், "பிரதமர் ரணில் விக்கிரம சிங்க புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருந்து முற்றாக விலகவில்லை" என அமைச்சரவை பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிக்கின்றார்.

ஆனால் நாட்டின் சமாதான முயற்சிகள் எதுவும்மேற்கொள்ளப்படவில்லை என்பது உண்மைநிலையாகும்.

எனவே பிரதமர் நாட்டு மக்களை அச்சுறுத்தும் நோக்கத்துடனேயே இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்புஒன்றின் மூலம் நாட்டு மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் பிரதமரின் இத்தகைய செயற்பாடுகளை இனியும் நாம் பொறுத்துக கொள்ளமாட்டோம் என்றார்

இதேவேளை தேசிய தேசாபிமான இயக்க உறுப்பினர் டாக்டர் குணதாச அமரசேகர இது பற்றிக் கருத்து தெரிவிக்கையில், பிரதமர் ரணிவிக்கிரம சிங்க சமாதான முயற்சியில் இருந்து விலகப்போவதாக அறிவித்தமை அவர் நாட்டை ஆளுவதற்குத் தகுதியற்றவர் என்பதை தானே ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதை உணரமுடிகின்றது என்றார்.

(தி,60,10)

# செய்தித் துளிகள்

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலையினரின் ஏற்பாட்டில் பண்டிதர் க.தங்கராசா ஞாபகார்த்த "அறநெறி வழிகாட்டும் அறிவுச் செல்வங்கள்" நூல் வெளியீடும் விசேட கலை நிகழ்ச்சிகளும் எதிர்வரும 16ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 1030 மணிக்கு தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான ஆச்சிரம சைவகலைப பண்பாட்டுப்பேரவை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரையை சிவ ஸ்ரீ கு.தியதகராசக் குருக்களும் நூல் நயப்புரையை சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். (உ)

## திரைக் கலைக் கண்காட்சி

(கொழும்பு)

சிங்கள சினிமாவின் 52வது ஆண்டு நிறைவையொட்டி திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் ஒழுங்கு செய்யபட்டுள்ள திரைக்கலைக் கண்காட்சி, கொழும்பு "ஜோன் டி சில்வா" மண்டபத்தில் எதிர்வரும் 22ம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் இலங்கைத் தமிழ் சினிமா சம்பந்தமான அரங்கை நிர மாணிக்கும பொறுப்பை திரைப் படக கூட்டுத்தாபனத்தின் விருப்பத்தின் பேரில் ''சலன சித்திரம்'' ஏற்றுள்ளது.

இக்கண்காட்சியைத் திறம்பட நடததுவதற்கு இலங்கைத் தமிழ்த் திரைப்படம் சம்பந்தமான புகைபபடங்கள், ஆக்கங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், விருதுகள், துண்டுப்பிரசுரங்கள், பாட்டுப் புத்தகங்கள், சுவரெட்டிகள்,போன்றவற்றை வைத்திருப்பவர்கள் அது பற்றி நேரடியா கவோ, தபால் மூலமோ "சலன சித்தரம்" கொடகாமம் வீதி, கரவெட்டி என்னும் முகவரியுடன் உடனடியாக தொடர்பு கொள்ளும்படி கேட் டுக் கொள்ளபபட்டுள்ளது. (உ)

## தண்ட உதை மூலம் வெற்றி வாகை

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் நெடுந்தீவு பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் கடந்த செவ்வாய் கிழமை நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில்சென் ஜோன்ஸ்விளையாட்டுக கழகம் அதனை எதிர்த்து விளையாடிய உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை 2:1 என்ற தண்ட உதை

## விபரம் சேகரிப்பு

(ஏழாலை)

குப்பிளான் வடக்கு உயர் பாது காப்பு வலயத்துக்குள் அமைந்த குடியிருப்புக்கள் பற்றிய விபரங்கள் இராணுவத்தினரால் சேகரிக் கப்பட்டுவருகின்றன.

கடந்த வாரம் முதல் மேற்படி வடக்கு கிராம அலுவலரும் இராணுத்தினரும் கூட்டாக இணைந்து விபரங்களைச் சேகரித்து வருகின்றனர். (தி-90)

## சீமெந்து விநியோகம்

(பொன்னாலை)

அராலி மத்தி ஊரத்தி மகாமாயி மாரியம்மன் ஆலய பரிபாலன சபையினரிடம் இந்து கலாசார அமைச்சினால் 500 சீமெந்துப் பைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி ஆலயச் சூழலுக்கு அண்மையில் வாழும் மலசலகூட வசதியற்ற குடும்பங்களுக்கு விநியோகம் செய்வதற்காகவே இச் சீமெந்துப் பைகள வழங்கப்பட்டுள்ளன. (தி-49)

## அனுமதி வழங்கல்

(பொன்னாலை)

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இரு பாடசாலைகளில் கடந்த முதலாம் திகதி முதல் தரம்-9 வகுப்பினை ஆரம்பிப் பதற்குரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தரம் 8வரையிலான வகுப்புக்களைக் கொண்டமைந்த அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை, பெண்ணாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை ஆகிய இருபாடசாலைகளுக்கே மேற்படி தரம் 9வகுப்பினை நடத்துவதற்குரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வகுப்புக்களை ஆரம்பிபபதற்குரிய அனுமதியை வலயக் கல்விப் பணிமனை சுற்றிக்கை மூலம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளது. (தி-40)

## உழவர் தின விழா

(பொன்னாலை)

அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் நடாத்தும் " உழவர் தின விழா'' எதிர்வரும் 15ம்திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி விளையாட்டுக் கழக மைதானத்தில் கழகத் தலைவர்

## பொங்கு தமிழ் கொடிகள் ஆயுதக் குழுவால் அறுக்கப்பட்டது

### மட்டக்களப்பில் சம்பவம்

( மட்டக்களப்பு)

பொங்கு தமிழ்நிகழ்வை முன்னிட்டு தென்கிழக்குப் பல்கலைககழக வளாகத்திலும் வீதியோரங்களிலும் கட்டப்பட்டிருந்த மஞ்சல் ,சிவபுக் கொடிகள் இனந்தெரியாத ஆயுதக்குழு ஒன்றினால் அறுத்தெறியப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7மணியளவில இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வெள்ளை வான் ஒன்றில் வந்த ஆயுதம்தரித்த இளைஞர்குழு ஒன்று கொடிகளை அறுத தெறிந்ததுடன், பொங்கு தமிழ் தொடர்பான பதாதைகளையும் சேதப்படுத்தியுள்ளது. இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில்திரண்ட பொதுமககளும் , பல்கலைக்கழக மாணவர்களும பெரும் ஆர்பாட்டத்தில் ஈடுபடடனர்

இதேவேளை சம்பவ இடத்திற்கு வருகைதந்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பொதுமக்களு டனும் பல்கலைக்கழ மாணவர்களு டனும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

மேற்படி சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல் கலைக கழக மாணவர்கள் போராட் டம்நடத்த விருப்பதாகத் தெரியவருகிறது.

எதிர் வரும் 21ம் திகதி பொங்குதமிழ்நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கச் சபை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆலோசனைச் செயலகம்ஒன்றை நிறுவும் யோசனையை பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சமில்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைக்கும் கேள்விப் பத்திரங்கள் மற்றும் பிரேரணைகள் தொடர்பாக தேவையான ஆலோசனைகளை அந்தச் செயலகம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கும்.

இப் பாராளுமன்ற ஆலோசனைச் செயலகம் நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகள் உள்ளவாங்கப்பட்டு உருவாக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவரது இந்த யோசனை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க் கப்பட்டுள்ளது. (உ-61,8)

## மாகாண சபைகள் அனைத்தும் ஜனவரியில் கலைக்கப்படும்

(கொழும்பு)

மாகாண சபைகள் அனைத்தும் எதிர்வரும் 26ந் திகதி கலைக்கப் பட்டு அவற்றுக்கான தேர்தல்கள் மே மாதத்தில் நடத்தப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கலைக்கப்படும் மாகாண சபைகள் அனைத்துக்கும் ஒரே நாளிலேயே தேர்தல்களை நடத்துவது என பிரதமர் தலைமையில் நடைபெற்ற கட்சித தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

மேலதிக செலவினத்தைப் பொது மககளுக்கு ஏற்படுத்துவதைத் தவிர்பபதற்காக மாகாண சபைக்கவுன்சிலர்களின எண்ணிக்கையைக் குறைக்கத திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். ஒரு சனிக்கிழமை அன்றே மாகாண சபை தேர்தலகள் நடாத்த விருப்பதாகவும அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச, ரவூப ஹக்கீம், மக்கள் ஐக்கியமுன்னணித தலைவர் தினேஷ் குணவர்த்தன, தோதல் ஆணையாளர் தயா சந்த திஸநாயக்க ஆகியோர் கலந்து கொண்டிருந

## யாழ்.தேசியகல்வியியல்கல்லூரியில் இறுக்கமான ஒழுக்க வரன்முறை தொடர்ந்தும் பேணப்பட வேண்டும்

### பீடாதிபதியிடம் பெற்றோர் சிபார்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல கல்லூரியின் இறுக்கமான ஒழுக்கவரன்முறைகள் தொடர்ந்தும் பேணப

தவறில்லை.

அவ்வாறு அவர்கள் செயற்படுவது எமது சமூகத்துக்குச் செய்கின்ற மிகப் பெரிய சேவையாக அமையும் நல்ல ஒழுக்கமுள்ள ஆசி

போட்டியில்சென் ஜோண்ஸ்விளையாட்டுக கழகம் அதனை எதிர்த்து விளையாடிய உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை 2:1 என்ற தண்ட உதை மூலமாக வெற்றி கொணடு சம்பியன் பட்டத்தை வென் றெடுத்துள்ளது.

நெடுந்தீவு மத்தி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் ஆட்ட நேரத் தில் எந்த ஒருகோலையும் இரு அணிகளும் பெறமுடியாது போகவே தண்ட உதைமூலமாக வெற்றி தோல்வி தா்மானிக்கப் பட்டது. இப்போட்டி யின் சிறப்பாட்டக் காராக சென்ஜோண்ஸ்விளையாட் டுக்கழகத்தின் எட்மன் ராஜ்குமார் தெரிவு செய்யப்பட்டார். (உ-68)

## அம்பாறையில் வெள்ளம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் அடை மழை காரணமாக தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

அம்பாறை-அக்கரைப் பற்று வீதியில் வெள்ள நீர் வீதியை ஊடறுத்துப் பாய்வதனால் போக்கு வரவுகளும் தடைப்பட்டுள்ளது.

(தி-4)

## இடமாற்றம்

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையில எழுதுவினைஞராக கடமையாற்றிய ஐ.தம்பிராச சென்ற முதலாம திகதி முதல் கிளிநொச்சிப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.(உ-97)

வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி விளையாட்டுக் கழக மைதானத்தில் கழகத் தலைவர் கமலநாதன் தலைமையில் பி.ப. 1.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில், மாட்டுச்சவாரி, கயிறிழுத்தல, ஓட்டப்போட்கள் என்பன நடைபெறவுள்ளன. (தி-49)

## ஒன்றுகூடல்

(தொல்புரம்)

சங்கானை பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒனறு கூடல் இன்று 12திகதி திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-70)

## விவேகானந்தர் ஜயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தர் நற்பணி மன்றத்தினரால், இவ்வருடம் வழமை போல வீரத்துறவி சுவாமி, விவேகானந்தரின் ஜயந்தியை ஒட்டி “ஆன்மீக வெழுச்சி வாரம்"இன்றுமுதல் 19ம்திகதி வரையான காலப்பகுதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை ஒட்டி பாடசாலை மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சு போட்டிகள் நடாத்தப் படடுள்ளதுடன், கொடிவாரமும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

(உ)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல கல்லூரியின் இறுக்கமான ஒழுக்கவரன்முறைகள் தொடர்ந்தும் பேணபட வேண்டும் என கல்லூரியின் ஆலோசனைச் சபை உறுப்பினர்கள் மற்றும பெற்றோர்கள் ஆகியோர் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதனி டம் ஏகோபித்துச சிபார்சு செய்துள்ளனர்.

கடந்த 3ஆம்திகதி சனிக்கிழமை இடம்பெற்ற பெற்றோர்களுக்கான கூட்டத்திலும் மறுநாள் இடம் பெற்ற கல்லூரியின் ஆலோசனைச் சபைக் கூட்டத்திலும் இச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இன்று யாழ்ப்பாணத்தில் சுடர் விட்டு பிரகாசிக்கின்ற யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகள் எமக்கு மகிழ்ச்சியைத தருகின்றது. இக்கல்லூரியல் கல்வி பயில்கின்ற மாணவர்கள மற்றும் கற்று வெளியேறிய மாணவர் கள் மிகுநத ஒழுக்க சீலர்களாக கற்றல, கற்பிதல் துறையில் மேமபட்டவர் களாக விளங்குகின்றனர். அவர்களைப் பாடசாலை அதிபர்கள் மிகவும விருப்பி வரவேற்கும் தன்மையினைக் காண கிறோம். கற்றல், கற்பித்தல் துறையோடு மட்டுமல்லாது பாடசாலைப் புறவேலைகளிலும் அவர்கள் அதிக ஈடுபாடு காட்டிச் செயற்படுகின் றனர்.

இந்த வகையில் அவர்களை வழி நடத்துகின்ற பீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்களைப் பாராட்டுகின் றோம். யாழ்ப்பாணம்தேசிய கல்வியயற கல்லூரியிலே பின்பற்றப்படுகின்ற ஒழுககப்பாரம்பரியம்தொடர வேண் டும். அவ்விடயத்தில் பீடாதிபதியும் ஏனைய கல்வியாளர்களும இறுக்கமான போக்கினை கடைப்பிப்பதில் தவறில்லை.

அவ்வாறு அவர்கள் செயற்படுவது எமது சமூகத்துக்குச் செய்கின்ற மிகப் பெரிய சேவையாக அமையும். நல்ல ஒழுக்கமுள்ள ஆசிரியர்களை எமது மண்ணுக்கு அளிக்கும் பணியினை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி தொடர்ந்து ஆற்றவேண்டும். அதன் செயற்பாடுகளுக்கு நாம் எப் போதும பக்க பலமாக இருப்போம் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

(உ)

மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியின பிரசார செயலா் விமல் வீரவன்ச, ரவூப ஹகீம், மக்கள் ஐக்கியமுன்னணித தலைவர் தினேஷ் குணவர்த்தன, தோதல் ஆணையாளர் தயா சந்த திஸநாயக்க ஆகியோர் கலந்து கொண்டிருநதனர்.

இதேவேளை, பிரதமரும் எதிர்க் கட்சித் தலைவரும் மாகாண சபை முதல்வர்களையும் ஆளுநர் களையும் விரைவில் சந்திக் கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த)

# மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

1983 ம்ஆண்டு மார்ச் மாத்தற்கு முன்னா்,மக்கள் வங்கி கிளைகளில அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத நகைகளை ஏலத்தில விற்பனை செய்ய மக்கள் வங்கி தீமானித்துள்ளது. அடகு வைத்தவர்கள் அடகுத் தொகையுடன் அதேயளவு தொகையை வட்டியாகச் செலுத்தி நகைகளை மீளப்பெற முடியாது எனவும் ஏலத்தில் விற்கப்படும் பொழுது இசலுகை செல்லு படியாகாது எனவும் மக்கள் வங்கியின் வடவலய நிறைவேற்றுப் பணிப்பாளர் சி. இளம் பிறைநாதன் அறிவித்துள்ளார்.

சாவச்சேரி- பளை (சாவகச்சேரியுடன் இணைக்கப்பட்டது), புங்குடுதீவு(யாழ்பிரதான வீதியுடன் இணைக்கப்பட்டது), நல்லூர் (யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையுடன் இணைக்கப்பட்டது),சங்கானை புத்தூா (சுன்னாகத்துடன் இணைக்கப்பட்டது), ஊர்காவற்றுறை;யாழ்.நவீன சந்தைக் கிளை, (தற்போது யாழ். பல்கலைக் கிளையாகப் பெயா்மாற்றம் செய்யப்பட்டுளளது),காங்கேசன்துறை (தற்பொழுது நவன சந்தை மேல் மாடியில் இயங்குகிறது)முல்லைத்தீவு;(தற்பொழுது புதுக் குடி யிருப்பில் இயங்குகிறது), பரந்தன் (தற்பொழுது தருமபுரத்தில் இயங்குகிறது),கிளிநொச்சி,மன்னாா, மாங்குளம்(தற்பொழுது மல்லாவியில் இயங்குகின்றது), முருங்கன் (தற்பொழுது ஆண்டான்குளத்தில் இயங்குகின்றது) ஆகிய கிளைகளில் அடகு வைக் கப பட்டு மீட்கப்படாத நகைகளே ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

(உ)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

12

காணிச் செய்கையினை அபிவிருத்தி செய்வதில் அதிக சிரமங்கள் உண்டென்பதில் தலைமைக்காரரிடையே கருத்தொற்றுமை காணப்பட்டது. யாழ்ப்பாணத்து விவசாயிகள் மிகுந்த முயற்சியுடையவர்களாயினும் அவர்கள் தங்கள் சொந்த ஊர்களில் அதிக பற்றுக்கொண்டுள்ளமையால் அவற்றிலிருந்தும் நீங்கி வேறு இடங்களிலே போய்க் குடியிருக்கமாட்டார்கள் என்பதையும், பொதுவாக விவசாயிகள் வறியோராயும் கடனாளிகளாயும் இருப்பதாற் குளங்களைப் புனர்நிர்மாணஞ் செய்வதற்கும், நிலங்களைச் சீர்திருத்திச் செய்கை பண்ணுவதற்கும் அவர்களிடம் மூலதனம் கிடையாதமையால் அரசாங்கத்தின் யோசனைகள் நடைமுறைப்படுத்த முடியாதவை என்று தலைமைக்காரர் சுட்டிக்காட்டினார்கள். மட்டக்களப்பிலே பெருமளவிலான நிலங்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலுள்ள உடைமையாளர் வசமாயிருந்தன என்றும், அவற்றிலே செய்கை பண்ணுவோர் உழைப்புக்குத் தக்க ஊதியம் பெறுவதில்லை என்றும் தலைமைக்காரர் சிலர் வலியுறுத்தினார்கள்.

**விவசாய வங்கிகள்**

சிங்களவர் வாழும் பகுதிகளிலுள்ள தலைமைக்காரர் விவசாய வங்கிகளை அமைக்கும் திட்டத்தை ஆதரிக்கிறார்கள் என்றும், அவற்றை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைத்துக் கொள்வது எத்துணைச் சாத்தியமானது என்பதைத் தான் அறிந்து கொள்ள விரும்புவதாகவும் தேசாதிபதி குறிப்பிட்டார். அதிக வட்டிக்குப் பணத்தைக் கடன் கொடுப்போரின் தொல்லைகளிலிருந்து விவசாயிகளை மீட்டுக் கொள்வதற்கும், சிறிதளவான வயல் நிலங்களின் உடைமைக்காரருக்கு பதவி புரிவதற்கும் இந்தத் திட்டம் ஏதுவாய் இருக்கும் என்றும் வலியுறுத்தப்பட்டது. மன்னார், வன்னி, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலே விவசாய வங்கிகளை அமைப்பதனால் பல நன்மைகள் ஏற்படுமென்பதிலே தலைமைக்காரரிடையே கருத்தொற்றுமை காணப்பட்டது.

**கட்டாக்காலி மாடுகள்**

முற்காலங்களிலே தொற்று நோய் பரவுவதன் காரணமாக மந்தைகளுக்குப் பெருஞ் சேதம் ஏற்பட்டது. நோய் ஏற்பட்டதும் அது மிக வேகமாகப் பரவியது. அந்நாட்களிலே மிருக வைத்திய சேவை மிக அரிதாகவே காணப்பட்டது. சில விடங்களிலே குடியானவரிடம் பெருந்தொகையான மாடுகள் கட்டாக்காலிகளாக வயல் வெளிகளிலும் பரந்த தரைகளிலும் உலாவித் திரிந்தன. அப்படியான இடங்களில் மிருகங்களைக் கட்டிவைக்கும் வழக்கமில்லை. சில மிருகங்கள் நோய்வாய்ப்பட்டதும் அவற்றின் மூலமாக ஒரு பட்டியிலுள்ள ஏனையவற்றுக்கும், அவை உலாவித் திரியுமிடங்களில் வந்து போகும் பிற மிருகங்களுக்கும் நோய் பரவும்.

தொற்று நோய்கள் மிருகங்களுக்கு ஏற்படுவதால் மந்தைகளின் உடைமைக்காரருக்குப் பெரும் நஷ்டம் ஏற்படுவதோடு வயற் செய்கையும் பாதிக்கப்படும். அதனால் அரசாங்கம் நோய் தடுப்பு முறைகளைப்பற்றி ஆலோசித்துத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தேசாதிபதியும் தலைமைக்காரரும் அவ்விடயந் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து, மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்துச் சில ஆலோசனைகளை முன்வைத்தனர்.

காட்டு மிருகங்களை வேட்டையாடுதல் பற்றி அரசாங்கம் பிரகடனப்படுத்திய கட்டளைகளை நிறைவேற்றும் விதங்களைப்பற்றியும் ஆராய்ந்தனர்.

தேசவழமைச் சட்டத்தின் அமுலாக்கம் பற்றியும் தலைமைக்காரர் தங்கள் கருத்துக்களைக் கூறினார்கள்.

**தமிழ்த் தலைமைக்காரரின் இரண்டாவது மகாநாடு**

தமிழ்த் தலைமைக்காரருடனான இரண்டாவது மகாநாடு மட்டக்களப்பில் 1912 இல் யூலை 15 ஆம் 16ஆம் திகதிகளிற் கூடியது. அதிற் பங்கு பற்றிய தலைமைக்காரர் பற்றிய விபரங்கள் மேல்வருமாறு உள்ளன.

**வடமாகாணம் :** யாழ்ப்பாணம் பிரிவின் ஓய்வு பெற்ற மணியகாரன் அதிகாரி எம்.தம்பாபிள்ளை; முசலிபற்று மாவட்ட அதிகாரி வி.பிராஸ்பிள்ளை, யாழ்ப்பாணம் பிரிவு மணியகாரன் சி.கே.ஆறுமுகம்; நெடுந்தீவு மணியகாரன் ஜே.என்.சந்திரசேகரம், முல்லைத்தீவு கரையோரப் பற்று, முதலியார் கே. யூ. தம்பையா.

**கிழக்குமாகாணம் :** கொட்டியாரம்பற்று வன்னிபம் ரீ.துரையப்பா; பாணமைபற்று வன்னிபம் ஜீ.எச்.கனகசபை; ஏறாவூர் கோறளைப்பற்று வன்னிபம் ஏ. கே. காரியப்பர்; கரவாகுபற்று வன்னிபம் எஸ்.டபிள்யூ. சின்னத்தம்பி, சம்மாந்துறைப்பற்று வன்னிபம் ஏ. எல். காரியப்பர்.

முஸ்லிம்களின் விவாகப் பதிவுகள், இந்துக்கோயில்களின் சொத்துடைமைகள், கிராமிய பாடசாலைகளிற் தொழிற் கல்வி, யானைகளைப்பிடித்தல், கதிர்காம யாத்திரைக்குக் கடவுச் சீட்டுக்களை வழங்குதல், கூட்டுறவுச் சங்கங்கள், புதிய விவசாயத் திணைக்களத்தின் பணிகள், கிராமங்களின் பெரிய குளங்களை அரசாங்கம் பொறுப்பேற்றல், வன்னியில் அபிவிருத்தி, வன்னியில் இறப்பர்ச் செய்கை, ஐரோப்பாவிற்குப் புகையிலை ஏற்றுமதி, கோயில்களில் மிருக பலியைத் தடைசெய்தல் என்பன குறித்துச் சபையினர் ஆராய்ந்தனர். மட்டக்களப்பிலே முஸ்லிம்களிடையே கலியாணப் பதிவுகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டனவென்றும் கலியாணங்கள் பதிவு செய்யப்படாதவிடத்து விவாகரத்துகள் மிகச் சுலபமாகின்றன என்றும் சொல்லப்பட்டது. முஸ்லிம்களின் விவாக சம்பந்தமான விடயங்கள் அவர்களின் சமயாசாரங்களோடும் சமூக வழமைகளோடும் தொடர்புள்ளவை என்பதால் அரசாங்கம் தன்னிச்சையாக எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாதென்றும், முஸ்லிம்களின் பிரதிநிதியாகச் சட்டசபையில் உள்ளவர் இதுபற்றி விண்ணப்பித்தால் அரசாங்கம் அதனைப் பரீசீலித்து, சமூகத்தவரின் விருப்பத்திற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தேசாதிபதி விளக்கினார். விவாகப் பதிவுகளைச் சட்டவிதிகளின் மூலமாகக் கட்டாயப்படுத்தவேண்டும் என்பதிலும், அவ்வாறு செய்யுமிடத்து, விவாகப்பிரிவினை சம்பந்தமான விதிகளும் உருவாக்கப்படல் வேண்டுமென்பதிலும் சபையோரிடையிற் கருத்தொற்றுமை காணப்பட்டது. (தொடரும்)

### அருஞ்சொல் விளக்கம் (தொடர்ச்சி)

**முத்தெட்டு (ம)-** வேளாண்மை செய்கை பண்ணப்படும் வயல்வெளியில் உடைமைக்காரரான போடியாருக்கு ஒதுக்கப்பட்டுள்ள வயற்பகுதி. விளைந்த நெல் முழுவதும் அவருக்குரியதாகும். முத்தெட்டு என்ற சொற்பிரயோகம் சிங்கள மொழி வழக்கிலுமுண்டு. அது முற்றூட்டு என்ற சொல்லுடன் தொடர்புடையது என்பர்.

**முதுசொம் -**முன்னோர்களிடமிருந்து உரிமையின் வழியாக ஒருவருக்குக் கிடைக்கும் ஆதனங்கள், பிற சொத்துகள் என்பன. தேசவழமையில் ஆண்களின் வழி உரிமையான சொத்துக்களே முதுசொம் என்று கொள்ளப்படும். அது தேட்டம், சீதனம் என்பவற்றோடு கலப்பதில்லை. ஆனால் முக்குவர் வழமையில் முதுசொம் பற்றிய கோட்பாடுகள் வேறானவை. அதிலே முதுசொம் மாதாக்கள் வழியானவை, தாதாக்கள் வழியானவை என இருவகைப்படும். அதிலே ஆண், பெண் வேறுபாடின்றி முன்னோரிடமிருந்து உரிமையின் வழியாகக்கிடைக்குஞ் சகல சொத்துக்களும் முதுசொம் எனப்படும். (தொடரும்)

வலம்புரியின் அனுசரணையுடன்
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்
கவிதைப் போட்டி -2004
1ம் பரிசு தங்கப் பதக்கம்
2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்
3ம் பரிசு வெண்கலப் பதக்கம்
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்
"தமிழா உனக்கேன் இக்கதி"

விதிகள்
- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

உங்கள் கவிதைகளை
கவிதைப்போட்டி-2004
வலம்புரி
இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்
அலுவலகப்பாவனைக்கு

முழுப்பெயர்..............................
..............................
தபால் முகவரி..............................
..............................
பிறந்த திகதி..............................
தே.அ.அ. இல ..............................
மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

.......... ..............................
திகதி போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை
இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

.................. ..............................
திகதி போட்டியாளர்கையொப்பம்

# இன்று ஒரு தகவல்

## விலங்குகள் வாழவைக்கும்

"அதோ போகின்றாரே... அவருக்கு அவ்வளவு சுலபமாக ஹார்ட்அட்டாக் வராது சார்! என்றார் ஒரு நண்பர். "ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள்?" "அவர் வீட்டில் புறா, கிளி, பூனை போன்றவற்றை வளர்க்கின்றார் சார். அதனால் அப்படிக் கூறினேன்" என்றார் அவர்.

"என்ன இது... பூனை வளர்ப்பதற்கும் மாரடைப்பு வராமல் இருப்பதற்கும் என்ன சம்பந்தம்?" என்றேன். அதன்பின் அவர் விபரத்தைக் கூறினார். அதுதான் இன்றைய தகவல். நியூ சயன்டிஸ்ட் என்று ஒரு விஞ்ஞானப் பத்திரிகை. அது என்ன கூறுகின்றதென்றால் வீட்டில் பூனை, நாய், முயல், புறா, கிளி, மீன் போன்றவற்றை வளர்க்கின்றோம் அல்லவா? செல்லப் பிராணிகள். இவை மனிதனது ஆயுளை அதிகரிக்குமாம். மாரடைப்பைக் குறைக்குமாம்.

உடலில் உள்ள பல கோளாறுகளைச் சரி செய்கின்றதாம். இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரோலைக் குறைக்குமாம். ஆராய்ச்சி செய்து பார்த்துவிட்டுத்தான் இவற்றை உண்மையென்று கூறுகின்றது அந்தப் பத்திரிகை.

"மனித வாழ்வில் செல்லப்பிராணிகளின் பங்கு" என்ற ஆராய்ச்சியாம் அது. இன்றும் அது தொடர்ந்து ஹார்ட்அட்டாக் வந்த நோயாளிகளில் 92 பேரை எடுத்துக் கொண்டு அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டுப் பதிவு செய்து வைத்தனர். ஒரு வருட காலத்தில் அவர்களில் 14 பேர் இறந்து விட்டனர்.

உயிருடன் இருந்தவர்களைப் பற்றிய குறிப்புகளை ஆராய்ந்து பார்த்தனர். அவர்களில் பெரும்பாலானோர் செல்லப்பிராணிகள் வளர்ப்பவர்களாம். இதற்கு என்ன காரணம்? தனிமையில் வாடாமல் தடுப்பது செல்லப்பிராணிகள். நாம் தனித்து வாழ்கிறோம் என்ற உணர்வு வராமல் இருந்தால் ஆயுள் அதிகரிக்குமாம்.

அவுஸ்திரேலியாவிலும் இதுபோன்ற ஒரு ஆராய்ச்சி நடந்தது. 5,741 பேரிடம் சோதனை செய்து பார்த்தார்கள். செல்லப்பிராணிகள் வளர்த்தவரின் உடலில் உள்ள இரத்தத்தில் மற்றவர்களைவிட இரண்டு சதவீதம் கொலஸ்ட்ரோல் அளவு குறைவாக இருந்ததாம்.

இது நான்கு சதவீதம் இருதய நோயைக் குறைக்குமாம். இதுமட்டுமல்ல டிரைகிளிசரைட் என்று ஒரு கொழுப்பு வகை ஆபத்தானது. இதுவும் இவர்களது உடலில் குறைவாக இருந்ததாம். இரத்த அழுத்தமும் சாதாரண நிலையில் இருந்ததாம்.

செல்லப் பிராணிகளிடம் இப்படி என்ன பெரிய விசேஷம்? வேறு ஒன்றுமில்லை அவற்றைப் பார்க்கும் போது நமது வெறுப்பு மாறிப்போகும். கோபம் மறைந்து விடும். களைப்புப் போய்விடும்.

மனம் லேசாவதனால் உடலும் சுகமாகிவிடும் அவ்வளவுதான். மனநோய் உள்ள குழந்தைகளுக்குக்கூட இது ஓர் நல்ல வைத்தியம். பூனையிடமும் நாயிடமும் குழந்தைகள் சந்தோஷமாக விளையாடும். பேச ஆரம்பிக்கும். அதன் பின் நம்மிடமும் சகஜமாகப் பேச ஆரம்பித்துவிடும். இதுவும் ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது.

சேர்வல் என்று ஓர் மனிதமிருக நட்பு ஆராய்ச்சியாளர் பெரிய ஒரு பட்டியலே கொடுத்துள்ளார் செல்லப்பிராணிகள் வளர்ப்பதனால் என்னென்ன நன்மைகள் உண்டென்று. சிறு சிறு கவலைகள் மறையுமாம். இடுப்பு வலி, தலைவலி, கால் வலி, தூக்கம் வராமல் இருப்பதற்கு, நரம்புத் தளர்ச்சி, எப்போதும் அசதி, குடல்வியாதிகள் போன்ற குறைபாடுகள் செல்லப் பிராணிகள் வளர்ப்பவர்களில் குறைவாக இருக்கின்றதாம்.

அதனால் செல்லப் பிராணிகள் வளர்ப்பதனால் ஒன்றும் பிழையில்லை. ஆனால் ஒன்று அவ்வவ்போது அவற்றுக்கு வேண்டிய தடுப்பூசிகள் போட்டுக் கொண்டு புத்திசாலித்தனமாக வளர்க்கவேண்டும்.

இவற்றை யோசித்துக் கொண்டிருந்த போது ஒருவர் என்னிடம் வந்தார் "சார் ... இடுப்பு வலி கடுமையாக இருக்கிறது! எந்த மருந்துவரைப் பார்க்கலாம்? " என்றார். நாம் உடனே அவருக்கு யோசனை கூறினேன்.

"சார் வீட்டில் ஏதாவது செல்லப்பிராணிகள் வளர்த்தால் இடுப்புவலி வராதென்று ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. அதனால் ஒரு பூனைக்குட்டியாவது வளருங்கள்" என்றேன்.

"எங்கள் வீட்டுப் பூனைக்குட்டியை நான் செல்லமாகத் துரத்தும் போது மாடிப்படியிலிருந்து வழுக்கி விழுந்ததனால் தான் சார் இந்த இடுப்பு வலியே வந்தது" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# இலங்கை சனத்தொகை வீழ்ச்சி
# மாணவர் தொகை குறைவு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் இணையும் மாணவர்களின் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டு வருவதன் காரணமாக, அடுத்த 10 வருடகாலப்பகுதிக்குள் இப் பாடசாலைகளுக்கு புதிய ஆசிரிய நியமனங்கள் தேவையில்லை என கல்வி, மனிதவள கலாசார அமைச்சு வெளியிட்டுள்ள வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சனத்தொகையில் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. இதனால், பாடசாலை செல்லும் மாணவர்களின் தொகை நாட்டின் சனத்தொகையில் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. இதன் காரணமாக, பாடசாலைகளில் இணையும் மாணவர்களின் தொகையிலும் படிப்படியாக பாரிய வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது.

அத்துடன், தற்போது பாடசாலைகளில் சேவையிலுள்ள ஆசிரியர்களின் மேலதிகமான தொகை சராசரியாக ஆயிரத்துக்கும் அதிகமாகவே இருந்து வருகின்றது. நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் 1 இலட்சத்து 19 ஆயிரத்து 812 ஆசிரியர்கள் சேவையாற்றி வரும் நிலையில், வருடாந்தம் மாணவர் தொகை 25ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை வீழ்ச்சியடைந்து வருகின்றது.

இந்நிலைமையை அவதானிக்குமிடத்து அடுத்த 10 வருடகாலப்பகுதிக்குள் புதிய ஆசிரிய நியமனங்கள் எதுவும் தேவையற்றனவாகவே உள்ளன என மேற்படி வருடாந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் 63 ஆயிரத்து 420·பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், 51 ஆயிரத்து 251 பட்டதாரி ஆசிரியர்களும், 5ஆயிரத்து 141 பயிற்றப்படாத ஆசிரியர்களும் சேவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-18)

## மக்களின் இடநெருக்கடியை நிவிர்த்தி செய்யக் கோரிக்கை

(திருநெல்வேலி)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து, 13 வருட காலத்திற்குப் பின்னர் தற்போது வடமராட்சி கிழக்குப் பகுதியில் தமது சொந்த இடங்களில் மக்கள் மீளக்குடியேறிவரும் நிலையில், அங்கு நிலவும் இடநெருக்கடியை நிவிர்த்தி செய்யுமாறு வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியேறிவரும் நிலையில், அங்கு இடநெருக்கடி நிலவுகிறது. எனவே, மீளக்குடியேறுபவர்களுக்கு அங்குள்ள அரச காணிகளைப் பகிர்ந்தளிக்கும் பட்சத்தில் இப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்.

ஆயினும், அப்பகுதியிலுள்ள அரச காணிகளை உரிய முறையில் மக்களுக்குப் பகிர்ந்தளித்தல், அதற்கான காணி உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் ஏற்கனவே, குடியேறியுள்ள அரச காணிகளின் அளவீடுகளை மீள மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், அப்பகுதியில் உள்ள சிறார்களின் நன்மைகருதி அழிவடைந்துள்ள முன்பள்ளிகளை புனரமைப்புச் செய்து தருவதுடன், அவற்றிற்கு வேண்டிய கற்றல், கற்பித்தல் உபகரணங்களை வழங்குமாறும் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-43)

# இராசி பலன்

**12. 01. 2004**

**(மார்கழி 28, திங்கட்கிழமை)**

| | |
|---|---|
| பஞ்சமி சித்தம் | மு.இ.11.09 மணி வரை |
| பூரம் | மு.இ 10.08 மணிவரை |
| இராகுகாலம் | 08.03-9.33 மணிவரை |
| சுபநேரம் | 12.33-2.03 மணிவரை |

**மேடம்**
ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம், தொழில் நன்மை, மனச்சோர்வு.

**இடபம்**
எடுத்த காரியம் தடைப்படும், மனப் பயம், போசன சுகம், மாதா சுகம்.

**மிதுனம்**
தடைப்பட்டகாரியம் கைகூடும், சத்துரு ஜெயம், பிரயாண நன்மை, உறவினர் சந்திப்பு.

**கடகம்**
காரிய சாதனை, விவாதம், தனவிரயம், சௌக்கியக் குறைவு.

**சிங்கம்**
ஜனவசியம், நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தனை, விருந்துபசாரம்.

**கன்னி**
நண்பர் விரோதம், முயற்சி தாமதம், பிரயாணம், மனக்கிலேசம்.

**துலாம்**
குதூகலம், காரிய சித்தி, நல்ல மனைவாசம், மேன்மை.

**விருச்சிகம்**
தொழில் நன்மை, முயற்சி பலிதம், அதிசயம், புதிய திட்டமிடல்.

**தனுசு**
குடும்ப நன்மை, காரிய தாமதம், பிரயாணம், பித்தரோகம்.

**மகரம்**
தர்மம், வாகன பயம், முயற்சி தடை, பெரியோர் வெறுப்பு.

**கும்பம்**
எடுத்த காரியம் சித்தி, புதிய பொருள் சேர்க்கை, மனச் சோர்வு, பிரயாண சுகம்.

**மீனம்**
மன மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், செய் தொழில் விருத்தி, முயற்சி கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## 320 கிராமங்களில் புனரமைப்புப் பணிகள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் விவசாயம், புனர்நிர்மாணம், வாழ்க்கை வசதிகளை அதிகரிக்கும் 5 வருடத்திட்டமொன்று, உள்நாட்டு விவகார மாகாணசபை, உள்ளூராட்சிசபை ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்திற்கு ஆசிய வங்கி, ஒபெக், ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பிற்கான நிறுவனம் ஆகியன நிதியுதவிகளை அளித்துள்ளன.

8.6 மில்லியன் ரூபாக்கள் செலவில் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தால் வடக்கு - கிழக்கில் நீர் வழங்கல், சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்றவற்றிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர். சிறிசேன இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

இப்பிரதேசங்களில் பாழடைந்த பல குளங்கள் புனரமைக்கப்பட்டு இதன் மூலம் விவசாய வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. 320 சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் கிராமத்து வீதிகள் ஆயிரத்து 250 கிலோமிற்றர் தூரத்திற்கு புனரமைக்கப்பட்டு 300 குழாய்க்கிணறுகளும் அமைக்கப்படவுள்ளன.

இத் திட்டத்தின் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 320 கிராமங்களில் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளன.

கிட்டத்தட்ட 24 ஆயிரம் குடும்பங்கள் சமாதான காலத்தில் சொந்த ஊருக்கு திரும்பியுள்ளன. ஆனால், அவர்களில் பெரும்பாலானோர் அடிப்படை வசதிகள் அற்று வாழ்கின்றனர். விவசாயத்தை மேற்கொள்ள ஏதுவாக ஏராளமான நிலங்கள் இன்னமும் புனரமைக்கப்படவில்லை. கண்ணிவெடி அகற்றப்படவில்லை. இன்னும் சொந்த ஊருக்குத் திரும்ப 3 இலட்சம் குடும்பங்கள் காத்திருக்கின்றன. இத்திட்டத்தால் இவர்களின் தேவைகள் அனைத்தும் நிறைவு செய்யப்படும் எனக்குறிப்பிட்டார். (உ-6)

## புதிய பிக்கு மன்றத்தில் பல தவறுகள் உண்டு

**எல்லாவல தேரர் குற்றச்சாட்டு**

(கொழும்பு)

மதமாற்ற தடைச்சட்டத்தை வலியுறுத்தி புதிய பிக்கு மன்றம் அமைக்கப்பட்ட விதத்தில் தவறு இருப்பதாக ஜாதிக சங்க சம்மேளனத் தலைவர் வண. எல்லாவல மெதானந்த தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

இம் மன்றத்தில் அடங்கியுள்ள விடயங்களை நாம் எதிர்க்கவில்லை. அதன் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட விதத்திலேயே தவறு இருக்கிறது. இதன் உறுப்பினர்கள் நிக்காயக்களின் நிறைவேற்றுக் குழுக்களாலேயே தெரிவு செய்யப்படவேண்டும். அத்துடன் ஜாதிக சங்க சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் இம் மன்றத்தில் உள்ளடக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும் நிலைமை சிக்கலானதாக இருந்தாலும் இம் மன்றத்தினர், புதிய சட்டங்கள் மூலம் எதிர்காலத்தில் மதமாற்றத்தை தடுத்து நிறுத்துவார்கள் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மதமாற்றத்திற்கு எதிராக சட்டங்களை இயற்றுவதற்கு ஆலோசனைகளை வழங்கவென 31 உறுப்பினர்களை கொண்ட நிரந்தர குழுவிலிருந்து, 11 உறுப்பினர்கள் உள்ளடக்கிய உபகுழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்றார். (தி-6)

## யப்பான் பிரதிநிதி குழு சு.பவுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

ஜப்பான் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கொண்ட குழுவொன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை சந்தித்து பேச்சுவார்த்தை களை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இச்சந்திப்பின் போது, ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் அதன் பலாபலன்கள் என்பன குறித்து பிரஸ்தாபிக்கப்படவுள்ளன.

மேற்படி பிரதேச அபிவிருத்தித் திட்டங்களுக்கு பொறுப்பான 20 அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ள இச்சந்திப்பில்,

எதிர்கால அபிவிருத்தி சம்பந்தமான ஜப்பானிய திட்டங்களுக்கு புலிகள் தரப்பு ஆலோசனைகளும் பெறப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (தி-4)

# அமெரிக்கப் படைகளுக்கு பாக். பிரஜை நிபந்தனை

(காபூல்)

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினருக்கு இரண்டு பிரதான நிபந்தனைகள் விதிக்கப் பட்டுள்ளன.

பாகிஸ்தான் இராணுவத்தின் வானிலைத் தகவல்களை ஒட்டுக் கேட்பதை நிறுத்துமாறும் எந்தவொரு சந்தேக நபரைச் சுடு வதற்கு முன்னர் அவர் அல்கெய்டா இயக்கத்துடன் தொடர்பு பட்டவரா என்று உறுதி செய்திகொண்ட பின்னர் அவரைச் சுடவேண்டும் என்றும் பாகிஸதானின் பிரஜை ஒருவர் அமெரிக்க இராணுவத்திற்கு நிபந்தனை விதித்துள்ளார்.

அப்கானிஸ்தானின் அல்கெய்டா இயக்கத்தலைவர் ஒஸாமா பின் லேடனின் உருவ ஒற்றுமையைக் கொண்டவரான அல் ஜபாகி என்பவர் பாகிஸ்தானில் இருந்து 9மாதங் களுக்குப் முன்னர் அனுப்பிய இலத்திரனியல் செய்தியில் இவ்வாறு நிபந்தனை விதிக்கப்படடுளள தாக அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிபந்தனைகள் நியாய மானவை என்ற அடிப்படையில் தீவிரவாதத்துகது எதிரான போரில இந்த நிபந்தனைகளைக் கடைப் பிடிக்கு மாறு தன்னாட்டு இராணுவத்திற்கு அறிவிக்கவுள்ளதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரி வித்துள்ளார்.

(தி-9)



வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற் றும் இந்திய வம்சாவழியினர் கலந்து கொண்ட "பிரவாசி பாரதிய திவாஸ்" இரண்டாவது ஆண்டு தின நிகழ்ச்சி புதுடில்லியில் நடைபெற்றது. இவ் விழாவில் கொலம்பியா விண்கல விபத் தில் உயிரிழந்த கல்பனா சாவ்லாவிற்கு சிறந்த வெளிநாட்டு இந்தியர் விருது வழங்கப்பட்டது. விருதினை பிரதமர் வாஜ்பாயிடம் இருந்து அவரது கணவர் ஜீன் பியரி ஹாரிசன் பெற் றுக் கொண்டார்.

## கால்நடைகளைத் தாக்கும் நோய் ஆய்வு செய்ய கனடா தீர்மானம்

(ஒட்டாவா)

கால்நடைகளுக்குப் பரவிவரும் மற்ஹோ எனும் நோயின் காரணமாக கனடா தன்நாட்டுப்பண்ணைகளில் மற்ஹோ நோய் பற்றிய ஆய்வுகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

தென்அமெரிக்காவில கடந்த மாதங்களில் விரைவாகப் பரவிய இந்நோயினால் அமெரிக்காவின் பொருளா தாரம பாரிய பினனடைவை எதிர் நோக்கி இருந்தது.

இந்நிலையில் அமெரிக்கா மற்ஹோவினுடைய ஆரம்பம் கனடாவில் இருந்தே தொடங்கியது என்றும், இந்நாட்டில் இருந்து 5ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட, மாட்டுத் தீவனங்களில் இருந்தே இந்த நோய்க்கிருமி பரவியுள்ளதாகவும் குற்றம் சாட்டியிருந்தது.

இதனை அடுத்துக் கனடா இந்த நோய்பற்றிய ஆய்வுகளை நடத்த முன் வந்துள்ளது.

அதேவேளை கடந்த ஆண்டு கனடாவில் பல்வேறுபட்ட நோய்கள் காரணமாக 30ஆயிரம் மாடுகள் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(து-9)

## சந்திரனில் மக்களை தரையிறக்கும் முயற்சி அமெரிக்கா மேற்கொள்ளுமென அறிவிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் சந்திரனில் மக்களைத தரையிறக்கும் முயற்சி தொடர்பாக அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இறுதியாக 1972ஆம் ஆண்டு அமெரிக்கப் பிரஜை ஒருவர் சந்திரனுக்கு காலடி எடுத்துவைத்ததைத தொடர்நது ,இந்த முயற்சியில் பலரைச சந்திரனுக்கு அனுப்புவதற்குத் திட்டமிட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

1957 ஆம் ஆண்டில் சோவியத் ரஷ்யா சநதிரனுக்கு முதல் விண்வெளி ஆய்வு கூடத்தை அனுப்பியதைத் தொடர்ந்து, வெற்றிகரமாகச் சோதனையை மேற் கொண்டது.

தொடர்ந்து 1961ஆம் ஆண்டுகளிலும் 1962, 1964ஆம் ஆண்டுகளிற்கும் பின்னர் 1966ஆம் ஆண்டிலிருந்து 1972 ஆம்ஆண்டு வரை ரஷ்யா தொடர்ந்தும் விண்ணூடகங்களை அனுப்பி சந்திரனில் வெற்றிகரமான ஆய்வுகளை நடத்தியிருந்தது.

சநதிரனில் கால் பதித்த முதலாவது மனிதன் என்ற பெருமை நல் ஆம்ஸ்ரோங் என்ற அமெரிக்கரையே சாரும் என்பது குறிப்பிடத்தக்கது.

(து-9)


இந்தியா – பாகிஸ்தான் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடியவேண்டும் என் பதற்காக காஷ்மீரின் பல்வேறு மசூதிகளிலும் சிறப்பு தொழுகைகள் நடைபெற்றன. ஸ்ரீநகரில் உள்ள மசூதி ஒன் றில் அமைதி வேண்டி தொழுகை நடத்தும் முஸ்லிம்கள்.


அர்ஜென்டினா நாட்டில் பியூனஸ் அயர்ஸ் நகரில் உள்ள மிருகக்காட்சி சாலையின் வெள்ளைப்புலி குட்டிகள் கொஞ்சி விளையாடும் காட்சி.

WORLD NEWS
உலக தரிசனம்

## குண்டு வெடிப்புகள் நடைபெறும் நாடுகளில் இந்தோனேஷியாவும்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 4பேர் உயிரிழந்திருப்பதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் உறுதி கோராத நிலையில் இது இஸ்லாமிய எதிர்ப்புத் தீவிரவாதிகளின் செயல என்று அந்நாட்டுப் பொலிஸார் கூறுகின்றனர்.

தொடச்சியாகக் குண்டு வெடிப்புக்கள் நடைபெற்றுவரும் இஸ்லாமிய நாடுகள் வரிசையில் இந்தோனேஷியாவும் ஒன்றாக மாறிவருவதாக உலக உல்லாசப்பிரயாண அமைபபின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் மொத்த வருமானத்தில் 60வீதம் சுற்றுலாத் துறையில் தங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(தி-9)

## வியட்நாமில் பறவைக் காய்ச்சல் ஆயிரம் கோழிகள் உயிரிழப்பு

(ஹனாய்)

வியடநாமில் பரவிவரும் ஒருவகைப் பறவைக் காய்ச்சல் காரணமாக ஆயிரக்கணக்கான கோழிகள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகா தார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அந்த நாட்டில் இடம்பெறவுள்ள மிகப்பெரிய திருவிழாவுக்கு முன்னா இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை கோழிப்பிரியர்களுக்கு கவலை அளிததுள்ளதாக செய்திகள் தொிவிக்கின்றன.

கடந்த ஒருவாரத்துக்கு முன்னர் இந்த நோய் குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரித்திருந்த போதிலும் இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தாமதமாக இடம்பெற்றதன் காரணமாகவே இந்தக் கோழிகள் உயிரிழந்ததாக கோழிக்கடை உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வியட்நாமில் இவ்வாறான ஒரு நோய், கோழிகளுக்கு ஏற்பட்டிருப்பது இது தான் முதல் தடவை என தெரிவிக்கப்படுகிறது.

1997-1998ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் ஒருவகையான நோய் கோழிப் பண்ணைக்கு ஏற்பட்டதாகவும், இதில் அந்தப் பண்ணையில் வேலை செய்த 6பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (து-9)

### ஸ்பிரிட் விண்கலம் வெள்ளியன்று பூமி திரும்பும் அமெரிக்க விஞ்ஞானிகள் எதிர்பார்ப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் நாஸா விணவெளி ஆராச்சி நிறுவனத்தால் செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பிவைக்கப் பட்ட "ஸபரிட்" என்னும் விண்கலம தனது ஆய்வுகளை முடித்துக் கொண்டுள்ளதாக நாஸாவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 14 நாட்களாக செவவாயில் தங்கியிருந்த நாஸாவின் விண்கலம விசேட ரோபோ இயந்திரங்களின் உதவியுடன் அங்குள்ள மண்மாதிரிகள், கற்துணிக்கைகள், சூரியக் கதிர்வீச்சு போன்றவற்றை ஆய்வு செய்யும் செய்மதிப்படங்களை வழங்கியது.

இந்த "ஸ்பிரிட்" விண்கலத்தின் ஆய்வு வெற்றிகரமாகவுள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்திருப்பதுடன்,

இந்த விண்கலம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அங்கிருந்து பூமியை நோக்கிப் புறப்படும் எனவும் தெரிவித துள்ளனர்.

இந்த விண்கலத்தில் நிகழ்த்தபபட்ட ஆய்வுகள் பற்றியும் அதனுடன் இணைக்கப்பட்ட ரோபோ இயந்திரம பற்றியும் கேட்டறிந்து கொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நாஸா விஞ்ஞானிகளைப் பாராட்டியுள்ளார்.

(தி-9)

### 21 அல்பேனியர் உயிரிழப்பு

சட்டவிரோதமாக இத்தாலிக்குச்செல்ல முயன்ற அல்பேனியர்கள் 21பேர் அவாகள் பயணம் செய்த படகிலேயே இறந்துள்ளனர்.

இத்தாலிக்கடற்பிரதேசத்தில் நிலவிய சிரற்றகாலநிலை காரணமாக படகு விபத்துக்குள்ளானதில் படகில் பயணம் செய்த 30பேரில் 21போ உயிரிழந்தனர். விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றுவதற்காக இத்தாலியக் கடற்படையினா பெரும முயற்சியை மேற்கொண்ட போதிலும அது பயனளிக்கவில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது. (தி-9)


பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சுமார் 17 மாதங்கள் சிறையில் இருந்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் நேற் று முன் தினம் சிறையிலிருந்து விடுதலையானார். சென்னையில் தி.மு.க. தலைவர் கருணாநிதியை நெடுமாறன் சந்தித்துப் பேசியபோது எடுத்த படம்.

### மன்னார் மாவட்ட அபிவிருத்திக் கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள துரித அபிவிருத்திகள் தொடர்பான மாநாடு ஒன்று நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில், புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தலைமையிலான குழு ஒன்றும் கலந்துகொண்டது.

இதன்போது, இவ்வாண்டில் மன்னார் மாவட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி, குடிநீர் விநியோகம், மீள்குடியமர்வு மற்றும், மீன்பிடி விசாயம் போன்ற தொடர்பான விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன. (தி-4)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

அண்மைக்காலமாக இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களின் தொகை அதிகரித்து வருவதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் அத்துமீறி மீன்பிடித்தொழில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் 80மீன்பிடிப்படகுகள் வடபகுதிக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு காங்கேசன்துறை மற்றும் காரைநகர் கடற்படைத்தளங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான அத்து மீறல்கள் மன்னார், முல்லைத்தீவு ஆகிய கடல் பிரதேசங்களிலேயே அதிகம் இடம்பெற்று வருவதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலத்தில் வடபகுதியில் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்ட 50ற்கும் மேற்பட்ட இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி-4)

## சார்க் அங்கத்துவநாடுகளிடம்

# டிரோனுக்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச் செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடவிருக்கும் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவிற்கு, ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சார்க் அங்கத்துவ நாடுகளிடம் கேட்டுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் மாநாட்டின்போதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த வேண்டுகோளை விடுத்திருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை, ஐக்கியநாடுகள் சபையின் அவதானிப்பாளர் ஸ்தானத்தை "சார்க்" அமைப்பிற்கு வழங்குமாறு அமைச்சர் டிரோன் பெர்னாண்டே ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்மூலம் சார்க் அமைப்பு வலுவடையும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ நம்பிக்கை தெரிவித்துள்ளார். (தி-60,10)

# நீதிமன்றங்களுக்கு இன்றுமுதல் பொலிஸ் பாதுகாப்பு

(களனி)

நாட்டில் உள்ள சகல நீதிமன்றங்களுக்கும் இன்று திங்கட்கிழமை முதல் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வாவின் பணிப்பின் பேரில் இப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேவையற்று நீதிமன்ற வளாகங்களுள் பிரவேசிப்போரை கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்கள் அமைந்துள்ள பிரதேசங்களிற்கும் பூரண பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதுடன், அப்பிரதேசங்களில் சந்தேகத்துக்கு இடமான வகையில் நடமாடுவோர் கைதுசெய்யப்படுவர் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி கொழும்பு பிரதான மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வைத்து பாதாள உலக கோஷ்டியை சேர்ந்த உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்தே, இப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பொலிஸ் தலைமையகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-4)

## பொலிஸ் பதவி உயர்வுகளின் போது

# முதலுதவி தொடர்பான ஆற்றல்களுக்கு புள்ளி

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்கும்போது முதலுதவி சிகிச்சைகள் தொடர்பாக அவர்களுக்குள்ள ஆற்றல்களுக்கு புள்ளி மதிப்பீடுகள் இடப்படும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

முன்னர் பொலிஸ் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்கும் போது அவர்களிடத்தே இருக்கும் முதலுதவி சிகிச்சை முறைகள் தொடர்பான ஆற்றல்களுக்கும் புள்ளிகள் இடப்பட்டு வந்தன. காலபோக்கில் அது கைவிடப்பட்டது.

இதனால் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அது தொடர்பில் இருக்கவேண்டிய ஆற்றல்கள் குறைந்து வருவதை தொடர்ந்து இந்நடைமுறை மீண்டும் கடுமையாக அமுல்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக நாடெங்கிலும் கடமையாற்றும் பொலிசாருக்கு விசேட பயிற்சிகளும், போட்டிகளும் நடத்தப்படவுள்ளன என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (தி-04)

# அஞ்சல் அலுவலகத்தை அமைக்க அமைச்சரிடம் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் 7உப-அஞ்சல் அலுவலகங்கள் இயங்கிவரும் நிலையில், அவற்றைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் ஓர் அஞ்சல் அலுவலகத்தை அமைத்துத்தருமாறு அப்பகுதி மக்கள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

54கிலோமீற்றர் நீளமுடைய வடமராட்சி கிழக்குப் பகுதியில் அஞ்சல் அலுவலகம் ஒன்று இது வரை அமைக்கப்படாத நிலையில், 7உப-அஞ்சல் அலுவலகங்கள் மாத்திரமே இயங்கிவருகின்றன. இந்நிலையில் இவ் உப-அஞ்சல் அலுவலகங்களைக் கட்டுப்படுத்தும் முகமாக கட்டுப்பாட்டு அஞ்சல் அலுவலகம் ஒன்று இப்பகுதியில் அமைக்கப்படவேண்டும்.

இதுகுறித்து பலதடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்தியும் எதுவித பயனும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. எனவே இந்நிலைமையினைக் கருத்தில் கொண்டு வடமராட்சி கிழக்குப் பகுதியில் அஞ்சல் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (தி-43)

# நெடுந்தீவு பிரதேச குழுநிலை போட்டிகளின் முடிவுகள்

வடக்கு-கிழக்குமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் 2004ஆம் ஆண்டுக்கான நெடுந்தீவுப் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் குழுநிலைப் போட்டிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன. இவ் முடிவுகளின் படி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் 71புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்திலும் சென் ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம் 44புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்திலும் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 31புள்ளிகளுடன் 3ஆம் இடத்திலும் உள்ளன.

**ஆண்களுக்கான குழு நிலைப் போட்டிகள்**

**துடுப்பாட்டம்**

1ஆம் இடம்:- உதயசூரியன் விளையாட்டுக்கழகம்

2ஆம் இடம்:- சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம்

**கரப்பந்தாட்டம்**

1ஆம் இடம்- சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம்

2ஆம் இடம்:-உதயசூரியன் விளையாட்டுக்கழகம்

**உதைபந்தாட்டம்**

1ஆம் இடம்:-சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம்

2ஆம் இடம்:-உதயசூரியன் விளையாட்டுக்கழகம்

2ஆம் இடம்:-ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

**கபடி**

1ஆம் இடம்:-சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம்

2ஆம் இடம்:-சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம்

**பெண்களுக்கான குழு நிலைப்போட்டிகள்**

**துடுப்பாட்டம்**

1ஆம் இடம்:-உதயசூரியன் விளையாட்டுக் கழகம்

2ஆம் இடம்:-சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம்

**காற்பந்தாட்டம்**

# உதைபந்தாட்ட லீக்கின் போட்டி முடிவுகள்

(சுண்டுக்குளி)

யாழ.உதைபந்தாட்ட லீக் அதில அங்கம் வகிக்கும் அணிகளுக்கிடையில் நடாத்திவரும் விலக்கல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வாரம் யாழ். புனித அந்தோனியார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆட்டங்களின் பெறுபேறுகள் வருமாறு,

கடந்த 7ஆம திகதி இடம்பெற்ற ஒரு ஆட்டத்தில் பொற்பதி அணி, கொய்யாத்தோட்ட அணியை 1:0 என்ற கோல்கணக்கில் வென்றது.

அன்றையதினம் இடம்பெற்ற 2வது ஆட்டத்தில் கலைவாணி, யூனியன் அணியை 5:3 என்ற கோல் கணக்கில் வென்றது. மறுநாள் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றோக் அணி, அரியாலை அணியை 3:2 என்ற கோல் கணக்கில் வென்றது.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் றோயல் அணி, பொற்பதி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

நேற்று முன்தினம் சென் அன்ரனீஸ அணி கலைவாணி அணியை 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (தி-110)

3ஆம் இடத்திலும் உள்ளன.

ஆண்களும் மற்றும் பெண்களுக்கிடையில் நடைபெற்று முடிந்த 10 குழுநிலைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு,

2ஆம் இடம்:-உதயசூரியன் விளையாட்டுக்கழகம்

**எல்லே**

1ஆம் இடம்-உதயசூரியன் விளையாட்டுக் கழகம்

**கரப்பந்தாட்டம்**

1ஆம் இடம்:-உதயசூரியன் விளையாட்டுக் கழகம்

2ஆம் இடம்:-ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

**வலைப்பந்தாட்டம்**

1ஆம் இடம்:-சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம்

2ஆம் இடம்:-உதயசூரியன் விளையாட்டுக்கழகம்

**எல்லே**

1ஆம் இடம்:-உதயசூரியன் விளையாட்டுக்கழகம்

2ஆம் இடம்:-ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

**கபடி**

1ஆம் இடம்:-ஸ்ரார் விளையாட்டுக் கழகம்

2ஆம் இடம்:-சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம்

இப் போட்டிகளில் வலைப்பந்தாட்டப்போட்டி மறறும் ஆண்களுக்கான கபடிப் போட்டியிலும் சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகமும், பெண்களுக்கான ,கபடிப் போட்டியில் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக சம்பியனாக வந்துள்ளமையுடன், இப் போட்டிகளுக்கான வெற்றிச் சுற்றுக் கேடயங்களைச் சொந்தமாக சுவீகாத்துக் கொண்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(தி-68)

# 18 ஓட்டங்களால் இந்திய அணி தோல்வி

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் இந்திய சிம்பாப்வே மற்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணிகளுக்கிடையிலான மும்முனை ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரில் அவுஸ்திரேலிய அணி இந்திய அணிக்கு எதிரான முதலாவது போட்டியில் 18ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 48.3ஓவரில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து, 288ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணிசார்பில் அன்ருசிம்மன்ஸ் 88ஓட்டங்களையும், கிளாக் 63 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் அஜீத் அகார்கர் 42ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பத் துடுப்பாட்டத்தின் மூலம் முதலாவது விக்கெற்றுக்கு இணைப்பாட்டமாக 103ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்ட போதும், தனது இறுதி 5விக்கெற்றுக்களையும் 13 ஓட்டங்களுக்கு இழந்தமையினால் 18ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணியிடம் தோல்வியைத் தழுவியது. இந்திய அணி 49 ஓவர் முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களான சௌரவ் கங்குலி 82 ஓட்டங்களையும், சச்சின்டெண்டுல்கா 63ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில ஹாபீஸ் 52 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3விக்கெற்றுக்களையும், வில்லியம்ஸ் மற்றும் சிம்மன்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றி வெற்றிக்கு வழிவகுத்தனர். (தி-68)

# விளையாட்டுச் செய்திகள்

## வை.எம்.சி.ஏயின்

# பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்.வை.எம்.சி.ஏ.வருடாந்தம் நடத்திவரும் உள்ளக விளையாட்டுப் போட்டியின் பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று திங்கட்கிழமை முதல் வை.எம்.சி.ஏ.ஆரங்கில் நடைபெறவுள்ளன.

12வயது பிரிவினருக்கான போட்டிகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கும், 18வயது பிரிவினருக்கான போட்டிகள் நாளையும், நடைபெறவுள்ளன.

இதேவேளை, ஆண்களுக்கான திறந்த தனிநபர் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதியும் பெண்களுக்கான திறந்த தனிநபர் போட்டிகள் எதிர்வரும் 16ஆம் திகதியும், ஆண்களுக்கான திறந்த இரட்டையர் போட்டிகள் மற்றும் திறந்த கலப்பு இரட்டையர் ஆட்டங்கள் எதிர்வரும் 17ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

(தி-68)

## 80 இலட்சம் ஒதுக்கீடு

(திருநெல்வேலி)

மண்டைதீவு அரசினர் மத்திய மருந்தகம் மற்றும் அதனுடன் இணைந்துள்ள பிரசவ விடுதி ஆகியன விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேற்படி புனரமைப்புப் பணிக்கு நிக்கொட் நிறுவனம் 80இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-43)

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு -குறள்

வலம்புரி

# புலிகள் காலஎல்லை விதிக்க வேண்டும்

ஜனாதிபதி மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதனால் சமாதான முயற்சியைத் தொடர முடியாமல் உள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்திருப்பது அவரின் சறுகல் தனத்தையே காட்டிநிற்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தியபோது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அதிகாரம் அரசுக்கு உண்டா என்ற கேள்வியை விடுதலைப் புலிகள் கேட்டிருந்தனர்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பாராளுமன்றத்தில் தமக்குப் பெரும்பான்மைப் பலம் உண்டெனவும், மக்கள் ஆதரவு உண்டெனவும் கூறியிருந்தார்.

அரசாங்கத்தின் இந்த உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுக்களை ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் விடுதலைப் புலிகள் தொடர்ந்தனர்.

ஆனால் இப்போது பாதுகாப்பு-உள்துறை-ஊடகத்துறை ஆகிய மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்றுவிட்டார் என்பதைக் காரணம் காட்டி, சமாதான முயற்சிகளைத் தொடரும் அதிகாரத்தை அரசு இழந்துவிட்டதாகக் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றுவதாகவே அமையும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு தனது அதிகார வரம்புபற்றித் தெரியாமல் போனமை வேடிக்கையானது.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டால் தன்னிடமுள்ள அதிகாரங்கள் யாவும் இழந்து போகுமென ஒரு கணம் சிந்தித்த பின்னரே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பிரதமர் கையெழுத்திட்டிருக்க வேண்டும்.


இல்லையேல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக ஜனாதிபதியிடம் அது பற்றிய அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்.

இதனை விடுத்து ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு விட்டு, ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பறிமுதல் செய்ததால் என்னால் எதுவும் செய்யமுடியாமல் இருப்பதாகப் பிரதமர் கூறுவது குழந்தைப்பிள்ளைத்தனமானது மட்டுமல்லாது, சமாதான முயற்சியில் விசுவாசம் கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட விடுதலைப் புலிகளின் நல்ல சிந்தனையைச் சிதறடிப்பதாகவும் அமையும்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றதனால் தன்னால் எதுவும் செய்ய முடியாதிருப்பதாகக் கூறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டில் தனது ஆளும் கட்சி எம்.பிக்கள் சகிதம் வாக்களித்து அதனை நிறைவேற்றிக் கொண்டமை,

# நரியைப் பரியாக்கி ஞாலம் வலம் வந்த மதுரைச் சொக்கர்

மனிதனால் மனிதனுக்குச் சொல்லப்பட்டது திருக்குறள். இறைவனால் மனிதனுக்குச் சொல் லப்பட்டது கீதை. மனிதனால் இறைவனுக்குச் சொல்லப்பட்டது திருவாசகம். இந்த திருவாசகம் என்றும் தேன் பொழிய காரணமாக இருந்தது குதிரை; நரி பரியாகி, பரி நரியானதால் ஏற்பட்ட விளைவே திருவாசகம் என்ற அமிர்தம். திருவாதவூரர் என்ற திருநாமம் பெற்று, பின் தென்னவன் பிரமராயன் என்ற சிறப்புப் பெயருடன், முதன் மந்திரியாக, அரிமர்த்தன பாண்டியனின் அவையில் இருந்து நல்லாட்சி செய்தவர் வாதவூரர். இப்படியான சூழ் நிலையில், அரசனுக்கு குதிரை வாங்க வேண்டும் என்ற எண்ணம் உருவானது அல்லது உருவாக்கப்பட்டது என்றும் கூறலாம்.



ஒருநாள் அரசன் தன் முதலமைச்சரிடம் நாற்பத்தி ஒன்பதினாயிரம் பொன்னைக் கொடுத்து, குதிரை வாங்கி வரும்படி கூறுகின்றான். இந்த நாற்பத்தி ஒன்பதினாயிரம் பொன்னும் குடிமக்களிடம் இருந்து அறவிடப்பட்ட வரிப் பணமே. குடிமக்களிடம் வரி வாங்காமல் அரச நிர்வாகம் நடத்த முடியாது. வரி வாங்கத்தான் வேண்டும். நியதியும் இதுவே. இவ்வாறு அறவிடப்படும் நிதியானது, நாட்டு மக்களின் வளமான வாழ்விற்கும் அவர்களின் அடிப்படைத் தேவைகளையும், கல்வி, கலை, கலாசார, பண்பாடு ஆகிய விழுமியங்களை முறையாக வளப்படுத்த செலவு செய்யப்பட வேண்டும். இதை விடுத்து குதிரைகள் கொள்வனவு செய்ய நிதியை வழங்கியது சரியா? என்ற கேள்வியும், வாதமும உருவாகலாம்.அரசனின் படைகளில் குதிரைப் படையும் ஒன்று. ஆனால் வாதவூரர் அமைச்சரானது முதல் நாட்டில் எந்தப் படையும் புனரமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை இல்லை. போர் இல்லை, பூசல் இல்லை, பகையே இல்லையென்னும் நிலையில் நல்லாடசி நடைபெற்றுவந்தது. இதனை "**பெருங்கடனாக நீதி பெருக்கியே...கருங்கடநாகம்**

**எட்டும், காளமா நாகம் எட்டும் பரங் கெட உலகபாரம்**

**பரித்தனர் திருத்தம் மிக்கார்**" என்று வாதவூரரின் நல்லாட்சி திறம்பற்றி கடவுள் மாமுனிவர் கூறியுள்ளார். ஆகவே குதிரையின் தேவை பற்றி முதலமைச்சர் அறியாமல் இருந்திருக்கமாட்டார் அரச ஆடம்பரத்திற்காகத்தான் இருக்கலாம் என அவர் எண்ணியிருக்கலாம். மக்களிடம் இருந்து பெறப் பட்ட வரி போருக்கான செல வீனங்களில் செலவு செய்யப்படு வதை இவர் விரும்பவில்லை. "ஈனம் இல்லாத அறவழியில் வந்த வரியை" அறப்பணிக்கே செலவிடுவதன் மூலம் அரசனையும் 'நல்வழிப்படுத்திக் கொள்ளலாம் என்று அவர் உள்ளம் எண்ணியது.

ஒருவனை நல்வழிப்படுத்துவதும் தீநெறிப்படுத்துவதும் நெறிப்படுத்தும் ஒருவரின் தன்மையைப் பொறுத்தது. தன்நிலையிலும் குறைந்த ஒரு நிலையில் உள்ள ஒருவரை உறைக்கக் கூறித் திருத்தலாம். தன்நிலையில் உள்ள ஒருவரை அறிவு கூறி நெறிப்படுத்தலாம். தன்னிலும் மேலான நிலையில் இருப்பவருக்கு, மாற்றீடாக சொல்லாலும் செயலாலும் வழிப்படுத்தலாம். அரசன் மேலானவன். அவன் ஆணையைப்புறம் தள்ளக் கூடாது என்பதும் வாதவூரருக்கு நன்கு தெரியும். என்றாலும் அரசனின் குணநலப் பண்புகளை நன்கு அறிந்தவரான வாதவூரர். குதிரை கொள்ளாது கோவில் கட்டவும் மற்றும் அறப்பணிகட்கும் செலவு செய்யும் வகையில் கொண்டுவந்த பொன்னை குருவினிடம் கொடுத்தார். கொடுத்த மாத்திரத்தே வாதவூரா எண்ணியது போலவே செலவு செய்யும்படி குருவும் செய்துவிட்டார்.

மாமுனிவர் சான்று பகர்கின்றார். திருப்பணிகள் ஆரம்பித்ததும் எத்தனை கொத்தனார்கள், எத்தனை கலைஞர்கள், எத்தனை குடிமக்கள் வேலையில் ஈடுபட்டுப் பலன் பெற்றார்கள். மன்னன் உயர்த்தப்பட்டான். மக்கள் போற்றினார்கள். என்றாலும் மன்னனின் உள்ளத்தை உறுத்தும் படியான செய்திகளைக் கூறி அவன் மனதினை சலனப் படுத்திய செயலால் வாதவூரர் சிறைப்படுத்தப்பட்டார். துன்பப்படுத்தப்பட்டார். குருநாதர் கூறியபடி குதிரைகள் வருமா? நான் மன்னனை ஏமாற்றிவிட்டேனா? என்றெல்லாம் ஏங்கினார், அழுதார், புலமபினார். இவ்வாறு ஏங்கி அழுத போது உள்ளத்தே உருவாகி கசிந்த எண்ணங்கள் தான் அவர் வாய்மொழியாக தித்திக்கும் தேனாக மீண்டும் திருப்பெருந்துறையை அடைந்த பின் ஊற்றாகி தேன் ஆறாகப் பெருக்கெடுத்தது என்றால் மிகையாகாது. சுடுமணலில் நிறுத்தப்பட்ட போதும் சிறைப்படுத்தப்பட்ட போதும் பின் வைகைக் கரையில் நின்று அழுது புரண்டபோதும் அவர் உள்ளக் குமுறலை கடவுள் மாமுனிவர் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

"**தொழும் கரமும் கண்ணீரும் துளங்கிய மெய்ப்புளகமுமாய் விழுந்து புரண்டு அழுதும்**"

"**கொங்கையால் மணி மார்பில் குறியிடும் மங்கையாள் பெருமானை மண் சுமக்க வைத்தாளோ**"

"**கங்கையாள் அலைக்கரத் தால் கரைத்திலளோ**"

"**வரியரவின் பலபடமோ மண் சுமக்கும் சும்மாடு**"

"**அன்னை தனக் காளாகி அடி யுண்டு என்னை அருட்பணி கொள்ள இசைந்தனையோ**" **கட்டு மரைத் துணி கச்சை, திருத் தோளில் கொட்டு முடி தலைமீது கவிழ்த்த கூடை யுடன் பிட்டு நர்த்தவமுடையாள் பின்பு வரும் திருக்கோலம் இட்ட முறத் தொழும் படி நான் கண்டி லனே**" என்று அழுதா.

குருவடிவாகி வந்த கோலம் கண்டவர், குதிரை வர்த்தகராக வந்த கோலம் கண்டவர் ஈற்றில் அந்தணவடிவினராகிவந்த கோலம் கண்டவர். வந்திக்கு ஒரே நாளில் கிடைத்த அந்த தரிசனத்தையும், சொக்கர் கொண்ட கூலி ஆள் வேடத் தையும் காண முடியாமல் போனது ஒரு பெரும் குறையாகவே இருந்து உள்ளத்தை உறுத்தியதை அவர் பாடல்கள் மூலம் நாம் அறியலாம். மேலும் சிறைப்பட்டபோதும் வெயிலில நிறுத்தப்பட் போதும் எழுந்த உணர்வுகள் வருமாறு;

"**என்னால் அறியாப்பதம் தந் தாய் யானும் அறியாது கெட்டேன்**"

"**இன்னோர் இடையுறு எனக் குண்டோ**"

"**நன்றே செய்வாய் பிழை செய் வாய்**"

"**அன்றே என் தாள் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்**"

"**என்னை அப்பா அஞ்சேல் என்று கூறுவார் இன்றி ஏங்குகின் றேன்**"

"**என்னை ஆண்டு கொள், விற் றுக் கொள், ஏற்றிவை**" போன்ற தொடர்கள் பல. இவற்றை கற்கும் தோறும் கற்கும் தோறும் எம் உள்ளத்தை உருக்கி கண்ணீர் மல்க வைப்பதும் நாம் உய்ந்தேற நமக்கு கிடைத்த அரும் சொற்பதங்களாகும். இப்பதங்களுக்கு உதாரணமாக நாம் நித்தம் நித்தம் ஆளாகி துயர்படுகின்றோம். இவற்றின் நின்றும் விடுபடவேண்டின் தினமும் திருவாசகம் என்னும் தேனைப் பருக வேண்டும். பருகப் பருக பாவவினை பறந்தோடும் என்பது திண்ணமுமாகும். எனவே திருவாசகம் தோன்ற காரணமான குதிரை யாகிய பரிமேல் மதுரைச் சொக்கர் உலாவந்தது பாண்டி நாடுகண்ட திருவிளையாடல்களில் தலையான ஆடல் என்றால் மிகையாகாது. □

நயினை
ஆ. தியாகராசா

## கல்வியியற் கல்லூரியை மூடிவிடத் தீர்மானம்

**த்து அதனை நிறைவேற்றிக் கொண்டமை, உலகறிந்த உண்மை.**

**அப்போது மட்டும் பாதுகாப்பு அமைச்சு தன்னிடம் இல்லாத போது, அதிகாரமும் இல்லாமல் போகும் என்பதைப் பிரதமர் நினைக்காமல் இருந்தமை வேதனைக்குரியது.**

**ஆக, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துகொண்ட பிரதமர், ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதால் தன்னால் எதுவும் செய்ய முடியாதுள்ளது எனக் கூறுவதை விடுத்து பாதுகாப்பு அமைச்சை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அதற்காக பொது மக்களைத் திரட்டி, வீதிப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.**

**பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னெடுத்த சமாதான முயற்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய பிரதமர் ரணிலுக்கு இப்போது சமாதானத்திற்காக-இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவற்காக மக்களைத் திரட்டி வீதிகளில் போராட்டம் நடத்துவதில் தடையெதுவும் இருக்க நியாயமில்லை.**

**இவை ஒருபுறம் இருக்க, ஜனாதிபதியும், பிரதமரும் மறைமுகமாக இணைந்து தமிழர்களின் உன்னதமான போராட்டத்தை நசுக்க முற்பட்டுள்ள இவ் வேளையில், சமாதான முயற்சியை தொடர்வதற்கான கால எல்லையை விடுதலைப் புலிகள் விதிக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகியுள்ளது.**

கொடுத்தார். கொடுத்த மாத்திரத்தே வாதவூரர் எண்ணியது போலவே செலவு செய்யும்படி குருவும் செய்துவிட்டார். இப்போது பொருள் குருவிட மும் இல்லை கைமாறி விட்டது. இதனால் கோவில் திருப்பணிகள் நடைபெற்றன. அறப்பணிகள் தொடர்ந்தன. இந்த செய்கையால் நாடும், மக்களும் ,மன்னனும் பெரும் பேறுபெற்றனர். "ஆம் பொருள் நமதே ஆனால் அறம் பிறர்க்காவதுண்டோ" என்று மன்னன் கூறியதாக கடவுள்

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நம்பிக்கை, நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடத்தில் நம்பிக்கை; கடவுளிடத்து நம்பிக்கை- இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும் உங்கள் முப்பத்து மூன்று கோடிப் புராண 11 தெய்வங்களிடத்தும் மேலும் அவ்வப்போது உங்களிடையே அன்னிய நாட்டவர் புகுத்தியிருக்கும் இதர தெய்வங்களிடத்தும் நம்பிக்கை இருந்து, ஆனாலும் உங்களிடத்தே நம்பிக்கை இல்லாவிட்டால் உங்களுக்குக் கதிமோட்சமில்லை.

நீ எதை நினைக்கிறாயே அதுவாகவே ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே நீ ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்.

**சுவாமி விவேகானந்தர்**

(கண்டி)

தொல்கொல மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரியை மறு அறிவித்தல்வரை மூடிவைப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்படி கல்லூரியில் நீண்ட காலமாக மாணவக் குழுக்கள் இடையே நிலவி வரும் பிரச்சினைகள் காரணமாக முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

இது தொடர்பாக சில முடிவுகளை மேற்கொண்டு கல்லூரியை இயல்பான முறையில் இயங்கச் செய்வதற்கு கல்வி அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதன் இறுதி முயற்சியாக அமைச்சின் அதிகாரிகள் கல்லூரி மாணவர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். ஆனால் அது பயனற்றுப் போய்விட்டதனால் கல்வி அமைச்சின் செயலாளர் இத்தீர்மனத்தை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக கல்லூரியின் பீடாதிபதிக்கு கல்வி அமைச்சு விடுத்திருக்கும் உத்தியோகபூர்வ அறிவிப்பினைத் தொடர்ந்து இக் கல்லூரியின் விடுதிகளில் தங்கியிருந்து கல்வி பயின்று வரும் மாணவர்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர். (தி-04)

## கேணல் கிட்டு ஞாபகார்த்தசிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கேணல் கிட்டுவின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை மிக உணர்வுபூர்வமாக யாழ்.குடா நாடெங்கும் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளில் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை ஈடுபட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலை வளாகங்கள் சிரமதான மூலமாகத் துப்புரவு செய்யப்படவுள்ளன.

இப்பணி இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பாகவுள்ளது.

இப்பணியில் இணைந்து கொள்ளுமாறு தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், பொது நிறுவனப் பணியாளர்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர்க்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## இராணுவ...

இருந்த பாலத்தின் அருகே தவறி வீழ்ந்தனர். அந்த நேரத்தில் சரசாலைப் பகுதியில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம் பிரஸ்தாப நபர்கள் இருவர் மீதும் ஏறியது. இதனால் மனோகரன் அவ்விடத்திலேயே மரணமானார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை பிரேதபரிசோதணையை மேற்கொண்டார். நேற்று மாலை 3.30மணியளவில்சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட் டது.

உயிரிழந்த பிரஸ்தாப நபர் தனது உறவினரைப் பார்ப்பதற்காக வன்னியில் இருந்து நெல்லியடிக்கு வந்திருந்தபோதே இவ்விபரீதம் நடந்ததாகக் கூறப்பட்டது. (த-52,5)

## அரசின்...

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சு உட்பட நாட்டின் முக்கிய மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றதன் மூலம் கைநழுவிப் போய்விட்டன.

சமாதானத்தை நிலைநாட்டுவற்கு அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகளுக்கு ஜனாதிபதியோ எதிர்க்கட்சியினரோ போதிய ஒத்துழைப்பை வழங்கவும் இல்லை.

எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு ஜனநாயக முறை மூலமே தீர்வு காணப்பட வேண்டும்.

இதேசமயம் நாட்டை நல்வழியில் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகளை எவரும் முறியடித்துவிடமுடியாதெனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். (தி 4.10)

# வலப்பனையில் மண்சரிவு 3 பேரைக் காணவில்லை

## 150 பேர் இடம்பெயர்வு

(கொழும்பு)

கண்டி வலப்பனை பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற மண்சரிவில் மூன்று பேர் காணாமல் போயுள்ளனர். காணாமல் போன மூவரும் மண்சரிவில் சிக்குண்டு இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

மண்சரிவு காரணமாக மூன்று வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. இதில் நான்குபேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் இருவர் பெண்களாவர். இவர்கள் கண்டி பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மண்சரிவு காரணமாக 150 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். (த)

## வரலாற்றுக்...

பெரும் விடுதலை அமைப்பை என்னால் உருவாக்க முடிந்தது.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக மகளிர் பிரிவினரின் நடன, நாடகக் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற போது அந் நிகழ்வில் கலந்து கொண்டு கலைஞர்களைக் கௌரவித்து கருத்துரை வழங்கியபோதே தலைவர் பிரபாகரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துரை வழங்குகையில்,

இன்று எமது விடுதலைப் போராட்டத்தில் பல அர்ப்பணிப்புகளும், அளப்பரிய தியாகங்களும் இடம்பெற்றுள்ளன. இவ் உண்மையான வரலாற்றுப் பதிவுகளையெல்லாம் உணர்வுபூர்வமாக கலைப்படைப்பாக எல்லோருக்கும் சொல்லக்கூடிய ஆற்றல் கலைஞர்களுக்கே உண்டு என்றார்.

இந்நிகழ்வில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக மகளிர் பொறுப்பாளர் செல்வி.மகேஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், பல்வேறுபட்ட நாடகங்கள், நடன நிகழ்வுகள் என்பவற்றின் நெறியாளரும் தாயக ஊடகங்கள் பலவற்றின் நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான பேபி ஆசிரியை அவர்களுக்கு தலைவர் பிரபாகரன் சிறப்பு விருது வழங்கி கௌரவித்தார். (ந)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 819/1 மருத்துவமனை வீதியைப் வதிவிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், யாழ் உயர் நீதிமன்ற முன்னாள் யூரரும், உலக சைவப் பேரவை (இல.கிளை) இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை, தென்மராட்சி ஓய்வூதியர் சங்கம் ஆகியவற்றின் ஆயுட்கால உறுப்பினரும், நல்லூர் பஜனைக்குழு உறுப்பினரும், ஓய்வு பெற்ற கால் நடை போதனாசிரியருமான

**திரு. ஆர்.வீ.கந்தசாமி**

அவர்கள் 22. 12. 2003இல் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது ஆன்மீக பொதுச் சேவை மென்மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பஸ் நிலைய ஞான வைரவர்
ஆலய நிர்வாக சபை
யாழ்ப்பாணம்

(8086)

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★கணனி பக்க அமைப்பாளர்கள்–இருபாலாரும்
(பகல், இரவுக் கடமை)

★அலுவலகச் செய்தியாளர்கள்–இருபாலாரும்
(பகல், இரவுக் கடமை)

★ஒப்புநோக்குநர்கள்–இருபாலாரும்


## ஆலோசகர்...

சூழ்நிலைகளும் அறவே இல்லாமற் போய் விட்டன.

மேலும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகளும் வீண்போயுள்ளன. இந் நிலையில் எந்தத் தலைமையுடனும் பேச்சுக்களை முன்னெடுப்பதென்ற சிக்கலான நிலை தோன்றியுள்ளது. ஜனாதிபதி தான் பறித்த அமைச்சுக்களை ஒப்படைத்தாலே 'பேச்சுவார்த்தைகளைத் தொடர முடியுமென பிரதமர் தெரிவித்துள்ளார். அவ்வாறில்லாது போனால் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பொறுப்புக்களில் இருந்து தான் விலகிக் கொள்ளப் போவதாகவும் பிரதமர் அறிவித்திருக்கிறார்.

இந் நிலையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது உசிதமானதல்லவென நோர்வேத் தரப்பினர் அன்ரன் பாலசிங்கத்திடம் சுட்டிக் காட்டியுள்ளனர். தென்னிலங்கை அரசியலில் ஸ்திரமான தன்மை ஏற்படும் வரை சமாதான முயற்சிகளில் இருந்து விலகிக் கொள்வ

# ஆசிபெற்றார் தொண்டமான்

(கொழும்பு)

கண்டி மல்வத்தபீடத்தைச் சேர்ந்த ரம்புக்வெலவிபசி மகாநாயக்கதேரரை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்றுச் சந்தித்து ஆசிபெற்றுள்ளார்.

அதேவேளை கண்டி அஸ்கிரிய பீட மகாநாயக்கா தேரரையும் அமைச்சர் நேற்று சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

## மாகாண...

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. மாவட்ட ரீதியில் தேர்தல்களை நடாத்துவதை விடுத்து முழுத் தேர்தல்களையும் ஒரு நாளிலேயே-சனிக்கிழமை ஒன்றில் நடத்த வேண்டுமென பிரதமர் கூறியுள்ளார். ஓரே நாளில் நடத்துவதற்குரிய புதிய சட்டங்களை ஜனவரி 26 அன்று இயற்றப் பிரதமர் விரும்புகிறார். இதற்கான முடிபு கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இச் சட்ட திருத்தம் இன்னும் இரு வாரங்களில் நடைமுறைக்கு வரவேண்டுமென அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது இதைவிட மாகாண சபைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதென்றும் இக் கூட்டத்தில் பிரேரிக்கப்பட்டது. ஆனால் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் இப் பிரேரணையை ஏற்கவில்லை.

இதேவேளை மாகாண சபைத் தேர்தலில் எக்கட்சி வென்றாலும் எதிர்க்கட்சியுடன் இணைந்து மாகாண மட்டத்தில் ஒரு குழுவாகச் செயற்படுவதென்ற தனது பிரேரணையை பிரதமர் விரைவில் ஜனாதிபதியி டம் சமர்ப்பிப்பார் என பிரதமருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (த-6)

# திலீபன் மருத்துவமனை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபன் மருத்துவமனை இன்றுகாலை 10 மணிக்கு புங்குடுதீவு பெருங்காட்டில் திறந்து வைக்கப்படவுள்ளது.

புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவையின் வேண்டுகோளுக்கு இணங்க விடுதலைப்புலிகளின் தீவகக்கோட்ட அரசியல்துறையினரால் இம் மருத்துவமனை திறந்து வைக்கப்படவுள்ளது.

புங்குடுதீவு மாவட்ட அரசினர் வைத்தியசாலை கடந்த 14 வருடங்களாக செயற்படாமல் இருந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ச)

# சோம தேரரின் மரணஅறிக்கை நாளை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சங்கைக்குரிய கங்கொடவில சோம தேரரின் மரணம் தொடர்பான அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அறிக்கை நாளை செவ்வாய்க் கிழமை நீர்கொழும்பு நீதிவானிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கை இராகம சட்ட மருத்துவ அதிகாரியிடம் கடந்த மாதம் 29ஆம் திகதி கையளிக்கப்பட்டதுடன், அதன் பிரதியொன்று கட்டுநாயக்கா பொலிஸாரிடமும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை தேரரின் மரணம் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூர்த்தியடையவில்லையென பொலிஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது. (தி.60.10)


மிக விரைவில்

உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்

**விவாத அரங்கு**

**கருத்துச் சங்கமம்**

மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்

✯ஆசிரியர்களா?

✯மாணவர்களா?

✯பெற்றோர்களா?

உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன

## மரண அறிவித்தல்

**திருமதி முத்துத்தம்பி சிவயோகம்**

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை

(பகல், இரவுக் கடமை)

★ஒப்புநோக்குநர்கள்–இருபாலாரும்
(பகல்,இரவுக் கடமை)

★கணக்குப் பதியுநர்கள்–பெண்கள் மட்டும்
(க.பொ.த.உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் சித்தி)

★இயந்திர இயக்குநர்கள்–பயிலுநர்
(ஆண்கள் மட்டும்)

★பாதுகாப்பு ஊழியர்கள்
(ஆண்கள் மட்டும்)

**கல்வித்தகைமைகள்**

இயந்திர இயக்குநர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கு க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**

20 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

**குறிப்பு:-** விண்ணப்பதாரர்கள் யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்துக்குள் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவர்களாக இருப்பது அவசியம்.

விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் பதவிகளைக் குறிப்பிட்டு முழுப்பெயர், நிரந்தர, தற்காலிக முகவரி, பிறந்த திகதி, பால், விவாக நிலை, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமை, பிற தகைமை என்பவற்றை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்களுடன், 13.01.2004 அன்று பி.ப 3.00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் வகையில் வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

**☼இரவுக் கடமைக்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.**

**வலம்புரி- சங்குநாதம்**
15,வெள்ளாந்தெரு
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

**நிர்வாக உத்தியோகத்தர்**

அரசியலில் ஸ்திரமான தன்மை ஏற்படும் வரை சமாதான முயற்சிகளில் இருந்து விலகிக் கொள்வதாக நோர்வே ஏற்கனவே அறிவித்திருக்கும் நிலையில், முற்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்த பாலசிங்கத்தின் விஜயமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ஆறு சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தைகளுடன் கடந்த ஏப்ரல் மாதம் பேச்சுக்கள் இடை நிறுத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் இடைக்காலத் திட்டவரைபு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு 2004 ஜனவரியில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவிருந்தன. இதன் பொருட்டு அன்ரன் பாலசிங்கம் ஜனவரி முற்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்து அடுத்த கட்டப் பேச்சுக்கான ஆயத்தங்களில் ஈடுபடவிருந்தார்.

இந் நிலையிலேயே தென்னிலங்கையில் அரசியல் பூகம்பம் வெடித்தது. எனினும் அத்தகைய அரசியல் குழப்பத்திற்கு இதுவரை தீர்வு எட்டப்படவில்லை. தீர்வு காணும் நம்பிக்கைகளும் அருகி வருகின்றன.

இதனாலேயே அன்ரன் பாலசிங்கத்தின் இலங்கை விஜயத்தை பிற்போடுமாறு கேட்டுக் கொண்டதாக நோர்வேத் தரப்பினர் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். (ச-த)

## திருமதி முத்துத்தம்பி சிவயோகம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துத்தம்பி சிவயோகம் (11.01.2004) நேற்றுக் காலை காலமானார்.

அன்னார் காலம்சென்ற காலி வர்த்தகர் பொ.முத்துத்தம்பியின் அன்புத் துணைவியாரும், காலம்சென்ற சுப்பிரமணியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா தம்பதிகளின் மருமகளும், சிவபாக்கியம்,இராசையா,கணபதிப்பிள்ளை,அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலம் சென்றவர்களான தங்கம்மா,இராசம்மா,பூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி இ.இராஜேஸ்வரி, சண்முகராஜா (**P.M&Sons Home Needs,**காலி), மகேந்திரன் (அதிபர் யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்) திருமதி தி.மகேஸ்வரி, செல்வராசா(**P.M&Sons Home Needs,**காலி) திருமதி ம.நாகேஸ்வரி, யோகராசா (அம்பாள் ரேடர்ஸ்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செ.இரத்தினம் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர் வேலணை, இணைப்பாளர் சிரான்-யாழ்.மாவட்டம்) திருமதி ச.திருநிறைச்செல்வி, திருமதி ம.சாரதாம்பிகை, கலாநிதி செ.திருச்செல்வம் (விவசாய பீடம்-பேராதனைப் பல்கலைக்கழகம்) திருமதி செ.சந்திரவதனி, க.மகேந்திரலிங்கம் (துளசிமாளிகை-யாழ்ப்பாணம்) திருமதி யோ.பவானி ஆகியோரின் அன்பு மாமியாரும்,

லலிதா, கவிதா, யசோதா, செந்தூரன், செந்தில்மாறன், றமேஸ், சுரேஸ், றூபிணி, தனுஜா, அபிநயா, சஞ்சீவன், தீபிகா, புவேந்தினி, கோகுலவாசன், துவாரகீசன், விதுசாயினி, துளசிதாசன், கஜரூபன், மதுரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வைஷ்ணவி, சேந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் (12.01.2004) இன்று திங்கட்கிழமை பி.ப.3.00மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**230A நாவலர் வீதி**
**யாழ்ப்பாணம்**
**T.P-0212223298**

தகவல்
**மக்கள், மருமக்கள்**

(8094)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.